விலை: 30.00
பக்கங்கள் : இருபது

Website : www.valampurii.lk
Viber : 076 636 3378

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk



MoneyGram. WESTERN UNION WU
Ria
Moving Money for better
உறவுகளிடமிருந்து Western Union, MoneyGram, Ria மூலம் அனுப்பிய பணத்தை ஒரு சில நிமிடங்களில் நீங்கள் பெற்றுக் கொள்ள...
உலகெங்குமுள்ள உறவுகளுக்கு துரித தபால்கள், பொதிகள் சேவை உடனுக்குடன் அனுப்ப...
இலைவமைகைத்தையும் ஒரே கூரையின் கீழ் அதிவிரைவு, பாதுகாப்பு, நம்பகத்தன்மை
SRI MURUGAN
TELE COMMUNICATION & AGENCY POST OFFICE
# 303, K.K.S ROAD, JAFFNA.
TEL: 021 222 5392, 2670 Fax: 3214
E-mail:srimurugan303@gmail.com, E-mail:Srimurugan09@gmail.com
(C-1186)



சங்கு 22 வள்ளுவர் ஆண்டு 2052 தை 09 வெள்ளிக்கிழமை (22.01.2021) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 034


### இனப் படுகொலையை மறவோம்

## கனடா பிரம்டன் நகரில் முள்ளிவாய்க்கால் நினைவுத் தூபி

### பிரம்டன் மாநகர சபை தீர்மானம்

(ரொரன்ரோ)
முள்ளிவாய்க்கால் நினைவுத் தூபியை கனடா பிரம்டனில் அமைப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதாக பிரம்டன் மேயர் பற்றிக் பிரவுண் 19

### மலசலகூடத்துக்குள்

## இளம் குடும்பஸ்தர் சடலமாக மீட்பு

### பருத்தித்துறையில் சம்பவம்

(கரணவாய்)
பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டிருந்த 19

### 18 வயது மாணவி கிளிநொச்சியில் சடலமாக மீட்பு

(கிளிநொச்சி)
கிளிநொச்சி ஸ்கந்தபுரத்தில் மாணவி ஒருவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.
கிளிநொச்சி ஸ்கந்தபுரம், 2ஆம் வாய்க்கால் பகுதியில் உள்ள வீடொன்றில் தூக்கில் தொங்கிய நிலையில் குறித்த மாணவி 19

### தொல்லியல் திணைக்களத்தினர்

# நிலாவரை கிணற்றுக்கு அருகில் அகழ்வுப் பணி

### இராணுவம் குவிக்கப்பட்டு பாதுகாப்பும் வழங்கப்பட்டது

(யாழ்ப்பாணம்)
யாழ்ப்பாணம் நிலாவரை கிணற்றுக்கு அருகாமையில் தொல்பொருள் திணைக்கள அதிகாரிகளால் அகழ்வுப் பணி முன்னெடுக்கப்பட்டது.
நேற்று முற்பகல் நிலாவரை கிணற்றுப் பகுதிக்கு வருகைதந்த தொல்பொருள் திணைக்கள அதிகாரிகள் மரம் ஒன்றின் கீழ் அகழ்வு நடவடிக்கையை முன்னெடுத்து ஆய்வுப் பணிகளை மேற்கொண்டனர்.
(19ஆம் பக்கம் பார்க்க)



### யாழ்.பல்கலை மாணவிக்கு கொரோனா

(யாழ்ப்பாணம்)
பதுளையிலிருந்து வந்து நல்லூரில் தங்கியிருந்து கல்வி கற்கும் யாழ்.பல்கலைக்கழக முகாமைத்துவ பீட மாணவி ஒருவருக்கு கொரோனாத் தொற்று உறுதி 19

### தமிழ்க் கட்சிகளின் யோசனையை

## அடியோடு நிராகரித்து குப்பையில் வீசுங்கள்

### ஐ.நாவிடம் இலங்கை அரசு வலியுறுத்து

03ஆம் பக்கம் பார்க்க

## கஜேந்திரகுமாரும் சுமந்திரனும்

### சர்வஜன வாக்கெடுப்புக்கு விரும்பவில்லை

### சுரேஸ் பிரேமச்சந்திரன்

(யாழ்ப்பாணம்)
சர்வஜன வாக்கெடுப்பை கஜேந்திரகுமாரும் சுமந்திரனும் விரும்பவில்லை என ஈபிஆர்எல் எவ் கட்சியின் தலைவர் சுரேஸ் பிரேமச்சந்திரன் தெரிவித்துள்ளார்.
நேற்று யாழ் ஊடக அமையத்தில் இடம் 19

## இலங்கைக்கு ஜெனிவாவில் இம்முறை கிடுக்குப் பிடி

### ஐ.நா ஆணையாளரின் காரசாரமான அறிக்கை இலங்கைக்கு அனுப்பப்பட்டது

07ஆம் பக்கம் பார்க்க

### கொரோனாத் தொற்று அதிகரிப்பு

## வவுனியாவில் ஒரு பகுதி மீண்டும் முடக்கம்

(வவுனியா)
கொரோனாத் தொற்று அதிகரிப்பு எதிரொலியாக வவுனியா பட்டாணிச்சூர் கிராமத்தின் சில வீதிகள் நேற்று மாலை 6 மணியிலிருந்து 19

### நெடுந்தீவில் மூழ்கடிக்கப்பட்ட படகில் இருந்து

மேலும் இரு சடலங்கள் மீட்பு

(யாழ்ப்பாணம்)
நெடுந்தீவு கடற்பரப்பில் மூழ்கிய இந்திய மீன்பிடிப் படகிலி 19

### கோவிட்டால் நேற்று இருவர் பலி +878 தொற்று

(கொழும்பு)
இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றால் நேற்று மட்டும் 19

### சுகாதாரப் பரிசோதகர்கள் மீது

## எச்சில் துப்பியவருக்கு 6 வருட கடூழியச் சிறை

(கொழும்பு)
பண்டாரகம - அட்டுலுகம பகுதியில் பொதுச் சுகாதார பரிசோதகர்கள் மீது எச்சில் துப்பிய சந்தேகநபருக்கு சிறைத் தண்டனை விதிக்கப் 19


### வடக்கில் நேற்றும்

## ஒன்பது பேருக்கு கொரோனாத் தொற்று

(யாழ்ப்பாணம்)
யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை மற்றும் பல்கலைக்கழக மருத்துவபீட ஆய்வு கூடங்களில் நேற்று வியாழக்கிழமை 679 19


நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# மரண அறிவித்தல்



தோற்றம் 02.11.1946

மறைவு 19.01.2021

## திரு. முத்துவேற்பிள்ளை நடேசன்

திரு. கந்தையா முத்துவேற்பிள்ளை (மானிப்பாய் இந்துக் கல்லூரியின் முன்னாள் அதிபர்) - திருமதி விமலாதேவி முத்துவேற்பிள்ளை (மானிப்பாய் இந்துக் கல்லூரியின் முன்னாள் ஆசிரியை) தம்பதியரின் மூத்த புதல்வன் திரு. முத்துவேற்பிள்ளை நடேசன் மானிப்பாய், யாழ்ப்பாணத்தில் கடந்த 19.01.2021 (செவ்வாய்க்கிழமை) அன்று காலமானார்.

அன்னார் மாலதி (நியூசிலாந்து), ஜெகதீசன் (நியூசிலாந்து) விமலேசன் (கனடா) ஆகியோரின் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் 69, பிரதான வீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள மலர்ச்சாலையில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு தகனக் கிரியைக்காக இன்று (22.01.2021) வெள்ளிக்கிழமை பிற்பகல் 1.00 மணியளவில் மானிப்பாய் பிப்பிலி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:-
குடும்பத்தினர்

(5350)


## ஓலைச்சுவடி சோதிட நிலையம்

உலகப் புகழ்பெற்ற தமிழ்நாடு வைத்தீஸ்வரன் கோவில் இந்தியாவில் இருந்து ஓலைச்சுவடி மூலம் பார்க்கப்படும். உங்களுடைய எதிர்காலப் பலன்கள், ஆரோக்கியம், கல்வி, திருமண வாழ்க்கை, ஆயுள் தீர்க்கம், உத்தியோகம், வெளிநாட்டுப் பலன்கள், முற்பிறப்பு, இப்பிறப்பில் தடைகள் ஏற்பட்டால் அவைகள் விலக நிவர்த்தி பரிகாரங்கள் மற்றும் எதிர்கால பலன்களைத் தெரிந்து கொள்ளலாம்.

மட்டக்களப்பு, திருகோணமலையில் உள்ளவர்களுக்கு
வவுனியாவில் வாசிக்கப்படும். சுபம்

தொடர்புகளுக்கு:- ஓலைச்சுவடி சோதிட நிலையம்
கைலாச பிள்ளையார் கோவிலுக்கு அருகாமையில், யாழ்ப்பாணம்.
தொடர்புகளுக்கு. 076 328 7119
(5354)

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603
021 567 1532

40 YEARS ANNIVERSARY

40 ஆவது ஆண்டு நிறைவையொட்டி
ஊஷா ஏஜென்சி ஸ்தாபனத்தின்
அதிரடி விலைக் கழிவுகளும்
விற்பனைக்கு பிந்திய சேவைகளும்

கடந்த நான்கு தசாப்த காலத்திற்கு
மேலான தையல் இயந்திர விற்பனையில்...
முன்னோடிகளான நாம் இவ்வாண்டு
நம்ப முடியாத விலைக் கழிவுகளுடன்




ஒரு முறை வந்து பாருங்கள்

ஊஷா ஏஜென்சி
இல. 62/32, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
☎-021 222 6982
(5353)


# அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு



கடந்த 25.12.2020 வெள்ளிக்கிழமை சிவபதமடைந்த எங்கள்
அன்புத் தெய்வம்

## அமரர் அஞ்ஜலா ஜெயகரன்

[ எழுதுவினைஞர் ]

அவர்களின் அந்தியேட்டிக்கிரியைகள் இன்று (22.01.2021) வெள்ளிக்கிழமை காலை 8.00 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக் கரையில் நடைபெற்று வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் நாளை மறுதினம் ( 24.01.2021 ) ஞாயிற்றுக் கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகைதந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

சண்டிலிப்பாய் மேற்கு,
சண்டிலிப்பாய்.

குடும்பத்தினர்
077 741 2348

(5324)

## சர்வதேச குற்றவியல் நீதிமன்ற விவகாரம்


# தமிழ் கட்சிகளின் யோசனையை தூக்கி குப்பையில் வீசுங்கள்

## ஐ.நாவிடம் இலங்கை அரசு வலியுறுத்து

(கொழும்பு)

**"இலங்கையை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தில் முன்னிறுத்த வேண்டும் என்று மூன்று தமிழ்த் தேசியக் கட்சிகள் அனுப்பிவைத்துள்ள யோசனை வரைபை ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையின் உறுப்பு நாடுகள் அடியோடு நிராகரித்து அதைத் தூக்கிவீச வேண்டும்" இவ்வாறு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையிலான அரசு வலியுறுத்தியுள்ளது.**







"இலங்கையை இனப் படுகொலை, மனிதாபிமானத்துக்கு எதிரான குற்றங்கள் மற்றும் போர்க்குற்றங்கள் உள்ளிட்ட குற்றங்களை விசாரிப்பதற்காக சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்துக்கும் வேறு பொருத்தமானதும் செயற்படுத்தக்கூடியதுமான சர்வதேச பொறுப்புக் கூறல் பொறிமுறைகளுக்கும் பாரப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை ஐ.நா. பொதுச் சபை, ஐ. நா. பாதுகாப்புச் சபை போன்றவை எடுக்க வேண்டும் என்று ஐ.நா. மனித உரிமைகள் சபையின் 46ஆவது கூட்டத் தொடரில் சமர்ப்பிக்கப்படவுள்ள புதிய தீர்மானத்தில் உறுப்பு நாடுகள் வலியுறுத்த வேண்டும்" என்று மூன்று தமிழ்த் தேசியக் கட்சிகள் கோரியுள்ளமை தொடர்பில் இலங்கை அரசின் வெளிவிவகார அமைச்சர் தினேஷ் குணவர்த்தன கருத்துரைக்கும் போதே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

"பாராளுமன்றத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் தமிழ்த் தேசியக் கட்சிகள் மூன்றும் அரசுக்கு எதிராக சர்வதேச ரீதியில் சதி வேலைகளில் களமிறங்கியுள்ளன.

தமிழ்த் தேசியக் கட்சிகளின் தலைவர்களான சம்பந்தன், விக்னேஸ்வரன் மற்றும் கஜேந்திரகுமார் ஆகிய மூவரும் பாராளுமன்ற உறுப்பினர்களாக இருந்துகொண்டு என்ன துணிவுடன் இவ்வாறு செயற்படுகின்றார்கள் என்று எமக்குத் தெரியவில்லை.

எனினும், அரசியலில் அனுபவம் மிகுந்த இவர்கள் இவ்வாறு செயற்படுவது அருவருக்கத்தக்கது.

இலங்கையில் இனப்படுகொலையோ அல்லது போர்க் குற்றங்களோ இடம்பெறவில்லை. இவ்வாறான நிலையில் இந்தப் பொய்க்குற்றச் சாட்டுக்களை விசாரிப்பதற்காக சர்வதேச குற்றவியல் நீதி மன்றத்தில் இலங்கையை எப்படி நிறுத்த முடியும்?

சர்வதேச பொறுப்புக்கூறல் பொறிமுறையை இலங்கை அரசு எந்தச் சந்தர்ப்பத்திலும் ஏற்றுக்கொள்ளாது.

ஏற்கனவே நிறைவேற்றப்பட்ட ஐ.நா. தீர்மானங்களின் இணை அனுசரணையிலிருந்து இலங்கை அரசு விலகியுள்ள நிலையில், புதிய பிரேரணை மூலம் எம்மை எவரும் அச்சுறுத்த முடியாது.

ஐ.நா. பொதுச்சபையிலும், ஐ. நா. பாதுகாப்புச் சபையிலும் இலங்கையை இறுக்க எமக்கு ஆதரவு வழங்கும் உறுப்பு நாடுகள் இடமளிக்கா.

இலங்கை, சர்வதேச அரங்கில் பலம் இழந்த நாடு அல்ல. இது பலம் பொருந்திய நாடு. எமது நாட்டின் இறையாண்மைக்கு சர்வதேச நாடுகள் மதிப்பு வழங்கும். எம்முடன் எந்த நாடும் இதுவரை முட்டிமோதவில்லை. நாமும் எந்த நாட்டையும் பகைக்கவில்லை.

எனவே, இலங்கையை சர்வதேச குற்றவியல் நீதி மன்றத்தில் முன்னிறுத்த வேண்டும் என்று மூன்று தமிழ்த் தேசியக் கட்சிகள் அனுப்பிவைத்துள்ள யோசனைவரைபை ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையின் உறுப்பு நாடுகள் அடியோடு நிராகரிக்க வேண்டும். அந்த யோசனை வரைபைத் தூக்கிவீச வேண்டும்" என தினேஷ் குணவர்த்தன தெரிவித்தார். (நி-4)

## இலங்கை ரூபா பாரிய வீழ்ச்சி

(கொழும்பு)


அமெரிக்க டொலர் ஒன்றுக்கான விற்பனை மற்றும் கொள்வனவு பெறுமதிப்படி இலங்கை ரூபா வீழ்ச்சியடைந்துள்ளது.

அதன்படி நேற்று முன்தினம் அமெரிக்க டொலர் ஒன்றின் விற்பனை விலை 198.26 ரூபாவாக பதிவாகியுள்ளது. இது இலங்கை வரலாற்றில் இலங்கை ரூபா அதிக வீழ்ச்சியடைந்த முதலாவது சந்தர்ப்பமாகும்.

அத்துடன் அமெரிக்க டொலர் ஒன்றின் கொள்வனவு விலை 192.85 ரூபாவாகவும் பதிவாகியுள்ளது. (நி-4)

## தடுப்பூசி உற்பத்தி செய்யும் சீரம் நிறுவனத்தில் தீ விபத்து

### திணறும் தீயணைப்பு வீரர்கள்



(டில்லி)

இந்தியாவில் கொரோனா தடுப்பூசி உற்பத்தியில் ஈடுபட்டு வரும் புனே மாநிலத்தில் உள்ள சீரம் நிறுவனத்தில் தீ விபத்து ஏற்பட்டுள்ளது. குறித்த நிறுவனத்தின்முதலாவது முனையத்தில் இவ்வாறு தீ விபத்து ஏற்பட்டுள்ளதுடன் 10 தீயணைப்பு வாகனங்கள் தீயை அணைக்கும் பணியில் ஈடுபட்டுள்ளன.

இதேவேளை, குறித்த பகுதியில் பணியில் ஈடுபட்டிருந்த ஊழியர்கள் பாதுகாப்பாக வெளியேற்றப்பட்டுள்ளனர்.

ஒக்ஸ்போர்ட் பல்கலைக் கழகம் மற்றும் அஸ்ட்ரா ஜெனகா நிறுவனம் இணைந்து உருவாக்கியுள்ள கொரோனாத் தடுப்பூசி மருந்தை, இந்தியாவில் கொவிஷீல்ட் என்ற பெயரில் சீரம் நிறுவனம் தயாரித்து வருகிறது.

இந்நிலையில், இந்தியாவில் தடுப்பூசித் திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளதால் மருந்து தயாரிக்கும் பணி சீரம் நிறுவனத்தில் விறுவிறுப்பாக நடைபெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (நி-4)

## தாதியர் உட்பட 14 பேருக்கு தொற்று



(கொழும்பு)

குளியாப்பிட்டி போதனா வைத்தியசாலையில் தாதியர் குழு உறுப்பினர்கள் சிலர் உட்பட 14 பேருக்கு கொரோனாத் தொற்றுறுதி செய்யப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் வைத்தியசாலையின் பணிக் குழாமினருக்கு மேற்கொள்ளப்பட்ட அன்டிஜன் பரிசோதனையின் போதே இவ்வாறு குறித்த கொரோனா தொற்றுறுதியானவர்கள் இனங்காணப்பட்டுள்ளனர். (நி-4)

# யாழ்ப்பாணம் மாநகர சபை

## சந்தைகள், இறைச்சிக் கடைகள், கருவாட்டுக் கடைகள், கோழிக் கடைகள், துவிச்சக்கரவண்டி பாதுகாப்பு நிலையம், சிற்றுண்டிச்சாலைகள் என்பவற்றை குத்தகைக்கு வழங்குவதற்கான மீள் கேள்வி அறிவித்தல் - 2021 (01.02.2021 - 31.12.2021)

யாழ்ப்பாண மாநகர சபையினால் 24.10.2020 ஆம் திகதிய பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட கேள்வி நிபந்தனைகளுக்கும் கீழ்க் குறிப்பிட்ட நிபந்தனைகளுக்கும் அமைவாக இதன்கீழ் அட்டவணைப்படுத்தப்பட்டுள்ள சந்தைகள், இறைச்சிக் கடைகள், கருவாட்டுக் கடைகள், கோழிக் கடைகள், துவிச்சக்கரவண்டி பாதுகாப்பு நிலையம், சிற்றுண்டிச்சாலைகள் என்பவற்றை 01.02.2021 ஆம் திகதி முதல் 31.12.2021 ஆம் திகதி வரையான காலப்பகுதிக்கு குத்தகைக்கு வழங்குவதற்கான அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகள் கோரப்படுகின்றது.

| | |
|---|---|
| கேள்விப் படிவக் கட்டணம் | - ரூபா 1,000.00 |
| கேள்விப் படிவம் விநியோகித்தல் | - 22.01.2021 - 27.01.2021 (மு.ப 9.00 - பி.ப.3.00 மணி வரை) |
| கேள்விப் படிவம் ஏற்றுக்கொள்ளல் | - 29.01.2021 (மு.ப 9.00 மணி வரை) |
| கேள்வி திறத்தல் | - 29.01.2021 9.30 மணி |

**நிபந்தனைகள் :** 2021 ஆம் ஆண்டுக்கான கேள்வியில் சித்தி பெற்று 1/3 பணம் செலுத்தாத கேள்விதாரர்கள் மீள் கேள்வியில் சித்தி பெறினும் பரிசீலிக்கப்பட மாட்டார்கள்.

| இல. | இறைச்சிக் கடை | கடை இல. | மீளளிக்கக் கூடிய கேள்விப் பிணைப் பணம் | ஏற்றுக் கொள்ளக் கூடிய ஆகக் குறைந்த கேள்வித் தொகை |
|---|---|---|---|---|
| 1 | பண்ணை கருவாட்டுக் கடை | இல.02 | 5,000.00 | 58,046.63 |
| 2 | பண்ணை ஆட்டிறைச்சிக் கடை | இல.03 | 5,000.00 | 207,181.80 |
| 3 | பண்ணை கோழியிறைச்சிக் கடை | இல.07 | 5,000.00 | 870,480.00 |
| 4 | செங்குந்தா கருவாட்டுக் கடை | இல.01 | 5,000.00 | 136,800.00 |
| 5 | செங்குந்தா கோழியிறைச்சிக் கடை | இல.03 | 5,000.00 | 364,500.00 |
| 6 | செங்குந்தா கோழியிறைச்சிக் கடை | இல.04 | 5,000.00 | 369,000.00 |
| 7 | செங்குந்தா ஆட்டு இறைச்சிக் கடை | இல.06 | 5,000.00 | 639,306.00 |
| 8 | புங்கன்குளம் ஆட்டிறைச்சிக் கடை | இல.01 | 5,000.00 | 101,904.08 |
| 9 | பாசையூர் மாட்டிறைச்சிக் கடை | இல.01 | 5,000.00 | 796,578.30 |
| 10 | நாவாந்துறை மாட்டிறைச்சிக் கடை | இல.01 | 5,000.00 | 786,903.87 |
| 11 | நாவாந்துறை மாட்டிறைச்சிக் கடை | இல.02 | 5,000.00 | 306,000.00 |
| 12 | நாவாந்துறை மாட்டிறைச்சிக் கடை | இல.04 | 5,000.00 | 357,210.00 |
| 13 | நாவாந்துறை மாட்டிறைச்சிக் கடை | இல.05 | 5,000.00 | 317,520.00 |
| 14 | நாவாந்துறை மாட்டிறைச்சிக் கடை | இல.07 | 5,000.00 | 223,256.25 |
| 15 | நாவாந்துறை மாட்டிறைச்சிக் கடை | இல.08 | 5,000.00 | 198,598.85 |
| 16 | நாவாந்துறை மாட்டிறைச்சிக் கடை | இல.09 | 5,000.00 | 220,577.18 |
| 17 | நாவாந்துறை ஆட்டிறைச்சிக் கடை | இல.11 | 5,000.00 | 59,296.86 |
| 18 | நாவாந்துறை கருவாட்டுக் கடை | இல.12 | 5,000.00 | 11,453.04 |
| 19 | அரியாலை ஆட்டிறைச்சிக் கடை | இல.01 | 5,000.00 | 71,541.23 |
| 20 | குருநகர் மாட்டிறைச்சிக் கடை | இல.02 | 7,000.00 | 556,860.63 |
| 21 | குருநகர் மாட்டிறைச்சிக் கடை | இல.06 | 7,000.00 | 526,500.00 |
| 22 | குருநகர் மாட்டிறைச்சிக் கடை | இல.07 | 7,000.00 | 405,433.35 |
| 23 | குருநகர் பன்றி இறைச்சிக் கடை | இல.01 | 5,000.00 | 240,100.00 |

**துவிச்சக்கரவண்டி பாதுகாப்பு நிலையம், சிற்றுண்டிச்சாலை, பொதுச்சந்தை**

| தொ. இல. | துவிச்சக்கரவண்டி பாதுகாப்பு நிலையம், சிற்றுண்டிச்சாலை, சந்தை | மீளளிக் கக் கூடிய கேள்விப் பிணைப் பணம் | ஏற்றுக் கொள்ளக் கூடிய ஆகக் குறைந்த கேள்வித் தொகை |
|---|---|---|---|
| 1 | பெரியகடை மரக்கறிச் சந்தை | 10,000.00 | 1,703,682.00 |
| 2 | பண்ணை மீன் சந்தை | 10,000.00 | 4,769,838.00 |
| 3 | புங்கன்குளம் உள்ளூர் உணவு உற்பத்தியாளர்களின் சந்தை | 2,000.00 | 8,059.55 |
| 4 | பண்ணை மீன் சந்தை சிற்றுண்டிச்சாலை | 1,000.00 | 152,190.00 |
| 5 | யாழ். பொது நூலக சிற்றுண்டிச்சாலை | 5,000.00 | 238,140.00 |
| 6 | துரையப்பா விளையாட்டு அரங்கத்தில் நிகழ்வுகளின்போது நடாத்தப்படும் சிற்றுண்டிச்சாலை (நாள் ஒன்றிற்கான கட்டணம்) | 1,000.00 | 12,064.41 |
| 7 | நீதிமன்ற துவிச்சக்கரவண்டி பாதுகாப்பு நிலையம் | 2,000.00 | 164,116.80 |

மேலதிக விபரங்களை மாநகர சபையின் நானாவித இறைவரிப் பகுதியில் அலுவலக நேரங்களில் பெற்றுக்கொள்ளலாம்.

**முதல்வர்,**
**மாநகர சபை,**
**யாழ்ப்பாணம்.**
**22.01.2021**

(C-1223)

# இலங்கை கிரிக்கெட் அணி வீரர்கள் இருவருக்கு கொவிட் தொற்று


இலங்கை கிரிக்கெட் அணியின் இரண்டு வீரர்களுக்கு கொவிட் தொற்று ஏற்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

மேற்கிந்திய தீவுகளில் நடைபெறவுள்ள சர்வதேச ஒருநாள் மற்றும் இருபது-20 போட்டித் தொடர்களில் பங்கேற்பதற்காக பயிற்சி பெற்று வந்த இரண்டு வீரர்களே கொவிட் தொற்றினால் பாதிக் கப்பட்டுள்ளனர். இந்த கிரிக்கெட் வீரர்கள் மூன்று குழுக்களாக பிரிந்து பயிற்சிகளில் ஈடுபட்டு வந்தனர் என தெரிவிக்கப்படுகின்றது.

கொவிட் தொற்றுக்கு இலக்கான இரண்டு வீரர்களும் கொவிட் சிகிச்சை நிலையங்களுக்கு அனுப்பி வைக்கப்படவுள்ளனர்.

இந்த கிரிக்கெட் வீரர்களுக்கு எவ்வாறு கொவிட் தொற்று ஏற்பட்டது என்பது குறித்து விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக சுகாதார பிரிவினர் தெரிவிக்கின்றனர். பயிற்சியில் ஈடுபட்ட அனைத்து வீரர்களும் இந்த தொற்று உறுதியான வீரர்களுடன் தொடர்பு பேணவில்லை என அறிவிக்கப்பட்டுள்ளது. (4)

# மரண அறிவித்தல்



## சரஸ்வதி வீரவாகு

யாழ்ப்பாணம், சண்டிலிப்பாயைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சரஸ்வதி வீரவாகு நேற்று *(21.01.2021)* வியாழக்கிழமை சண்டிலிப்பாயில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நல்ல தம்பி - நாகம்மா தம்பதிகளின் அன்பு மகளும் வேலுப்பிள்ளை - குஞ்சுப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மருமகளும் வேலுப்பிள்ளை வீரவாகுவின் அன்பு மனைவியும் ஜெயந்திராதேவி, காலஞ்சென்ற கஜேந்திரன் (ஜேர்மனி) மற்றும் லோகேந்திரம் (ஜேர்மனி) ஆகியோரின் அன்புத் தாயாரும் காலஞ்சென்றவர்களான தங்கம்மா, சிவபாக்கியம், நவரத்தினம், இரத்தினம் ஆகியோரின் பாசமிகு சகோதரியும் காலஞ்சென்றவர்களான பூபாலசிங்கம், நவரத்தினம், மகாலிங்கம், பஞ்சாட்சரம், வாமதேவன் ஆகியோரின் மைத்துனியும் காலஞ்சென்ற இராஜகோபாலன் மற்றும் பத்மலோஜினி, கமலவதியின் மாமியும் கார்த்திகா சாயிந்தன் (அவுஸ்திரேலியா), கோபிகா மோகனராஜ் (அமெரிக்கா), கோபாலஸ்காந்தன் (அவுஸ்திரேலியா), துஷிந்தன், துர்விதா, துக்ஷியா, வைஷ்ணவன், கஜனி ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் சாய்விஜய், சாய்ஹரிணி ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று *(22.01.2021)* வெள்ளிக்கிழமை பிற்பகல் *1.00* மணியளவில் சண்டிலிப்பாயில் உள்ள அன்னாரின் 'கோகுலம்' இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக கொட்டுப்பனை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

(C-1256)

இல.98, கல்வளை வீதி, சண்டிலிப்பாய்.
021 205 2809
077 210 7886
தகவல்:- குடும்பத்தினர்

# முள்ளிவாய்க்கால் நினைவுச் சின்னம் சென்னையில் அமைக்க கோரிக்கை

## உருத்திரகுமாரன் வேண்டுகோள்

**(லண்டன்)**

**இலங்கைத்தீவில் இறந்தவர்களை நினைவுகூருவதற்கான வெளி தமிழ்மக்களுக்கு இல்லாத நிலையில், சென்னை மெரினா கடற்கரையிலோ அல்லது சென்னையின் வேறு பகுதியிலோ முள்ளிவாய்க்கால் நினைவுச் சின்னம் ஒன்றினை தமிழ்நாடு அரசு நிறுவ வேண்டும் என நாடு கடந்த தமிழீழ அரசாங்கத்தின் பிரதமர் வி.உருத்திரகுமாரன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.**

யாழ்.பல்கலைக்கழகத்தில் நிறுவப்பட்டிருந்த முள்ளிவாய்க்கால் நினைவுத்தூபி அழிக்கப்பட்டமை தொடர்பில் இடம்பெற்றிருந்த கவனயீர்ப்பு கண்டன கூட்டத்தில் உரையாற்றும் பொழுதே இக்கோரிக்கையினை அவர் விடுத்துள்ளார்.

மேலும் அவர் தெரிவிக்கையில்,

இலங்கைத்தீவில் தமிழ் மக்களுக்கான அரசியல் வெளி இல்லாத நிலையில்தான் நாடுகடந்த தமிழீழ அரசாங்கம் உருவாக்கப்பட்டிருந்தது.

தற்போது நினைவுகூருவதற்கான வெளியும் தமிழ் மக்களுக்கு அங்கில்லாத நிலையில், அதற்கான வெளியினை இலங்கைத்தீவுக்கு வெளியே உருவாக்க வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது.


உலகின் தலைநகரங்களில் முள்ளிவாய்க்கால் அடையாளச்சின்னங்களை உருவாக்கும் வகையில், அதற்கு முன்மாதிரியாக தமிழகத்தின் சென்னை மெரினா கடற்கரையிலோ அல்லது சென்னையின் வேறு பகுதியிலோ முள்ளிவாய்க்கால் அடையாளச் சின்னத்தை தமிழ்நாட்டு அரசு உருவாக்க வேண்டும் எனக் கோருகின்றோம்.

இதற்கு தமிழ்நாட்டின் கட்சிகள், அமைப்புக்கள், சிவில் அமைப்புக்கள் ஆதரவு வழங்க வேண்டுகிறோம்.

இதுமட்டுமல்லாது மே-18 முள்ளிவாய்க்கால் இனஅழிப்பு நாளினை உலகெங்கும்வாழும் தமிழர்களை அடையாளப்படுத்தும் விதமாக "உலகத்தமிழர் தேசிய துக்க நாளாக மே-18ஐ தமிழ்நாட்டு அரசு பிரகடனப் படுத்த வேணடும் எனவும் கேட்டுக் கொள்கின்றோம் என நாடுகடந்த தமிழீழ அரசாங்கத்தின் பிரதமர் வி.உருத்திரகுமாரன் கோரிக்கை விடுத்துள்ளார்.

(நி-4)

# அமெ.ஜனாதிபதி, துணை ஜனாதிபதிக்கு வாழ்த்துத் தெரிவித்தார் கோட்டா





(வோஷிங்டன்)

அமெரிக்காவின்46 ஆவது ஜனாதிபதியாக பதவியேற்றிருக்கும் ஜோ பிடனுக்கும் துணை ஜனாதிபதி கமலா ஹாரிஸிற்கும் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ வாழ்த்துக்களை தெரிவித்துள்ளார்.

ஜோ பிடனுக்கு வாழ்த்து தெரிவித்து ஜனாதிபதி பதிவிட்டுள்ள டுவிட்டர் பதிவில், நானும் எனது அரசாங்கமும் ஒரு வலுவான மற்றும் பரஸ்பர நன்மை பயக்கும் இருதரப்பு உறவை நோக்கி ஒன்றிணைந்து செயற்பட எதிர்பார்ப்பதாக குறிப்பிட்டுள்ளார்.

துணை ஜனாதிபதியாக பதவியேற்றுள்ள கமலா ஹாரிஸிற்கும் வாழ்த்துகளை தெரிவித்து ஜனாதிபதி பதிவிட்டுள்ள டுவிட்டர் பதிவில், பலப்படுத்தப்பட்ட இருதரப்பு உறவை நோக்கி நாங்கள் ஒன்றிணைந்து செயற்பட எதிர்பார்த்துள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

இதற்கிடையில், பிரதமர் மகிந்த ராஜபக்ஷ, அரசு மற்றும் இலங்கை மக்கள் சார்பில், அமெரிக்காவின் புதிய ஜனா திபதி பிடன் மற்றும் துணை ஜனாதிபதி கமலா ஹாரிஸ் ஆகியோருக்கு வாழ்த்துக்களை தெரிவித்துள்ளார்.

பிரதமர் மகிந்த ராஜபக்ஷவும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவும் பிடன் மற்றும் ஹாரிஸை வாழ்த்தியுள்ளமையும் குறிப்பித்தக்கது.

(நி-4)

# ஆத்ம சாந்திப் பிரார்த்தனையும்

## நன்றி நவிலலும்



மண் மகிழ
21.07.1953

விண் மகிழ
21.12.2020

அமரர்

## உயர்திரு.கந்தசாமி நித்தியானந்தன்

கடந்த 21.12.2020 திங்கட்கிழமை இறைபதம் அடைந்த எங்கள் குடும்பத்தலைவர் கந்தசாமி நித்தியானந்தன் அவர்களின் அந்தியேட்டிக்கிரியைகள் 21.01.2021 அன்று கீரிமலை கண்டகி தீர்த்தக்கரையில் நடைபெற்று வீட்டுக் கிருத்திய நிகழ்வும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையும் 22.01.2021 இன்று அன்னாரின் இல்லத்தில் நடைபெறுகின்றது.


அன்னார் நோயுற்றிருந்த வேளை தகுந்த முறையில் சிகிச்சைகளினை வழங்கிய யாழ். போதனா வைத்தியசாலை சமூகத்தினர், தெல்லிப்பளை ஆதார வைத்தியசாலை குறிப்பாக புற்றுநோயியல் பிரிவுச் சமூகத்தவர்க்கும் அன்னாரின் பிறப்பு முதல் இறப்பு வரை பல வழிகளிலும் தோளோடு தோள் நின்று உதவியளித்த உறவுகள், அன்பர்கள், நண்பர்கள், அயலவர்கள் மற்றும் அன்னாரின் பிரிவினை அறிந்து இறுதிச்சடங்கில் கலந்து கொண்டு எமக்கு ஆறுதல் வார்த்தைகளினை நல்கிய நல்லுங்கள் மற்றும் தொலைபேசி, சமூக வலைத்தளங்கள், பத்திரிகைகள் வாயிலாகவும் துண்டுப்பிரசுரம், பனர்கள், மலர்வளையங்கள் மூலம் தமது அனுதாபங்களைப் பகிர்ந்தோருக்கும் அயலவர்கள், உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறோம்.

அன்னாரின் இறுதிக்கிரியை நிகழ்வில் பங்குபற்றிய அனைவரையும் நாட்டில் நிலவும் கொவிட்-19 கொரோனா சூழ்நிலை சுகாதார நடைமுறைகள் காரணமாக அழைக்க இயலாமைக்கு மிகவும் வருந்துகின்றோம்.

பன்னாலை, தெல்லிப்பளை. (5347) குடும்பத்தினர்.

# மரண அறிவித்தல்

மலர்வு
21.10.1947



உதிர்வு
20.01.2021

## திரு மார்க்கண்டு கணேசன்

## (ராசு,புவனேந்திரன்)

அல்வாய் வடக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திரு.மார்க்கண்டு கணேசன் (புவனேந்திரன்,ராசு) அவர்கள் 20.01.2021 புதன்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற மார்க்கண்டு- பவளம் தம்பதியினரின் அருமை மகனும் காலஞ்சென்ற ஜெயக்கொடி- ஜெயராசா ஆகியோரின் அன்புச் சகோதரனும் காலஞ்சென்ற செல்வாம்பிகையின் அன்புக் கணவரும் உதயணன் (லண்டன்), பிரதாபன் (லண்டன்), பிரதீபன் (லண்டன்), வித்தியா, பிரதிகரன் (லண்டன்) ஆகியோரின் அன்புத் தந்தையாரும் உதயநிலா (லண்டன்), கௌசல்யா (லண்டன்), தயாளன், தபேந்தினி (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 21.01.2021 நேற்று வியாழக்கிழமை பிற்பகல் 3.00 மணியளவில் நடைபெற்றது என்பதனை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

(C-1221)

ஜெயமகால்
அல்வாய் வடக்கு.


தகவல்:-
த.கஜன் (பேரன்)

# உடுவில் கமநல சேவைகள் நிலையத்துக்குட்பட்ட நெற்செய்கையாளர்களின் கவனத்திற்கு

(குப்பிழான்)

உடுவில் கமநலசேவைகள் அதிகாரப் பிரிவில் உரமானியம் பெற்றுக் கொண்ட 60 பரப்புத் தொடக்கம் 89 பரப்பு வரையிலான விவசாயிகளிடமிருந்து நெல் ஆயிரம் கிலோகிராம் வீதமும், 90 பரப்புத் தொடக்கம் 120 பரப்பு வரையிலான விவசாயிகளிடமிருந்து 1500 கிலோ நெல் வீதமும் கட்டாயம் நெல் சந்தைப்படுத்தும் சபைக்கு வழங்க வேண்டும் எனவும், ஆகக் கூடியதாக 5000 கிலோகிராம் வரை வழங்க முடியும் எனவும் உடுவில் கமநல அபிவிருத்தி உத்தியோகத்தர் செல்வி கு. தமிழ்மதி தெரிவித்துள்ளார்.

நெல்லை வழங்கும் விவசாயிகளின் பொருட்டு மாத்திரம் 2021 ஆம் ஆண்டு சிறுபோகம் தொடக்கம் உரமானியம் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (5-18)






"சப்ரிகம" என்ற திட்டத்தின் கீழ் புனரமைக்கப்பட்ட கரவெட்டி பிரதேச ஆளுகைக்கு உட்பட்ட அல்லையம்பதி முதலாம் குறுக்கு வீதி, அந்திராண் குறுக்கு வீதி, சின்னாலடி வீதி, புதுக்குளம்கரை வீதி, ஜங்கமன்ஸ் வீதி, ஆலடி வீதி என்பன பாராளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதனின் இணைப்பாளரான இனியவன் மற்றும் பிரதேச சபை உறுப்பினர் ஆகியோரால் மக்கள் பாவனைக்கு கையளிக்கப்பட்டன.

(படம்-மகாலிங்கம்)

# கட்டுப்பாட்டை இழந்த ஹன்டர் கடையுடன் மோதி விபத்து

## ஒருவர் காயம்




(சாவகச்சேரி)

கொடிகாமம்-புத்தூர்ச்சந்திப் பகுதிக்கு அருகாமையில் நேற்று முன்தினம் புதன்கிழமை மாலை இடம்பெற்ற வாகன விபத்தில் ஒருவர் காயமடைந்துள்ளார்.

சாவகச்சேரி பகுதியில் இருந்து கொடிகாமம் நோக்கிப் பயணித்த ஹன்டர் ரக வாகனம் வேகக் கட்டுப் பாட்டினை இழந்து வீதி ஓரம் இருந்த கடையுடன் மோதி விபத்துக்குள்ளாகியுள்ளது.

இதில் வாகனம் மற்றும் கடை ஆகியன சேதமடைந்துள்ளன. அத்துடன் வாகனச் சாரதியும் காயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (5-30)

# திவ்ய மங்கள பாதுகாபிஷேகம்



(யாழ்ப்பாணம்)

ஓம் ஸ்ரீ பரம்ஜோதி அம்மா பகவானின் ஜென்ம தினத்தை முன்னிட்டு பகவானின் பாதுகைகளுக்கு திவ்ய மங்கள பாதுகாபிஷேகம் நடைபெறவுள்ளது.

இந்த பாதுகா அபிஷேகமானது ஜனவரி 18 ஆம் திகதி முதல் மார்ச் 7 ஆம் திகதி வரை 49 தினங்கள் 49 வகையான மங்கள பொருட்களால் நடைபெறவுள்ளது.

உங்கள் இல்லங்களிலிருந்தே இந்த நிகழ்ச்சியில் கலந்து கொள்ளலாம்.

இந்த நிகழ்வானது **Zoom App** மூலம் 49 தினங்கள் நேரலையாக ஒளிபரப்பு செய்யப்படவுள்ளது.

இந்த நிகழ்வில் கலந்து கொள்ள பதிவு மேற்கொண்டால் பாதுகாபிஷேகத்தில் கலந்து கொள்வதற்கான லிங்க் உங்கள் இமெயிலுக்கு அனுப்பி வைக்கப்படும்.

இந்த மகா சக்தி வாய்ந்த பாதுகை அபிஷேகத்தில் கலந்து கொள்வதினால் கிடைக்கக் கூடிய நன்மைகள்

நல்ல ஆரோக்கியம் மற்றும் நீண்ட ஆயுள், தீராத நோய்களில் இருந்து விடுதலை, செல்வச் செழிப்பு, கடன்களில் இருந்து விடுதலை, குடும்ப ஷேமம், நல்ல உறவு முறை, விரும்பிய கல்வி மற்றும் வேலை வாய்ப்பு, திருமண பாக்கியம், தொழில் மற்றும் வர்த்தக துறை அபிவிருத்தி மாறாது'என்று எண்ணும் தலைவிதி மாற ஆரம்பிக்கும். மனக் காயங்களில் இருந்து விடுதலை கிடைக்கும், அளவில்லாத மன அமைதி கிடைக்கும் இவை தவிர தாங்கள் விரும்பிய வரம் பெறலாம்.

பதிவு செய்வதற்கான **Link** மற்றும் மேலதிக தகவல்களுக்கு 077 364 7436 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்புகொள்ளவும்.

அனைவரும் இணைந்து கொண்டு ஸ்ரீ பரம்ஜோதி அம்மா பகவானின் அருளைப் பெறுவோம். நன்றி நமஸ்தே அம்மா பகவான் சரணம். (5)

# எழுமாறாக பி.சி.ஆர்.பரிசோதனை

(சாவகச்சேரி)

தென்மராட்சி-நாவற்குழி சந்திப் பகுதியில் நேற்று வியாழக்கிழமை காலை 56 பேருக்கு எழுமாறாக பி.சி.ஆர்.பரிசோதனை மேற்கொள்ளப்பட்டுள்ளன.

ஏ-9 வீதி மற்றும் ஏ-32 வீதிகள் ஊடாக யாழ்.நோக்கிப் பயணித்த வெளிமாவட்ட வாகனங்களை மறித்து குறித்த பி.சி.ஆர். பரிசோதனை முன்னெடுக்கப்பட்டது. (5-30)

# தங்கச் சங்கிலி அறுத்த இருவர் பொலிஸாரால் கைது

(சாவகச்சேரி)

சாவகச்சேரி-சங்கத்தானைப் பகுதியில் கடந்த மூன்று தினங்களுக்கு முன்னர் வீதியால் சென்ற பெண்ணின் 4 பவுண் தங்கச் சங்கிலி அறுத்த இருவர் நேற்று வியாழக்கிழமை சாவகச்சேரி பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சாவகச்சேரி பொலிஸ் நிலையப் புலனாய்வுப் பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கு கிடைத்த இரகசியத் தகவலின் அடிப்படையில் கொடிகாமம்-மிருசுவில் பகுதியைச் சேர்ந்த இரு இளைஞர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

திருடப்பட்ட நகைகளையும் குறித்த சந்தேக நபர்களிடம் இருந்து பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்களை நீதிமன்றத்தில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை சாவகச்சேரி பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (5-30)

# சம்மேளனத் தலைவர் தெரிவு

(குப்பிழான்)

சண்டிலிப்பாய் பிரதேச இளைஞர் சம்மேளனத்தின் 2021 ஆம் ஆண்டுக்கான புதிய நிர்வாகத் தெரிவுக் கூட்டம் கடந்த 17 ஆம் திகதி சண்டிலிப்பாய் பிரதேச செயலர் கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

குறித்த நிகழ்வில் வலி. தென்மேற்குப் பிரதேச சபையின் தவிசாளர் எஸ். ஜெபநேசன் பிரதம விருந்தினராக கலந்து கொண்டார்.

புதிய நிர்வாகத் தெரிவில் சண்டிலிப்பாய் இளைஞர் சம்மேளனத் தலைவராக இளவாலை இளைஞர் கழகத்தைச் சேர்ந்த அலோசியஸ் அனோஜன் ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டார். (5-18)

# மழையால் வெங்காய செய்கை பாதிப்பு நட்டஈடு கோரும் விவசாயிகள்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் வலிகாமம் வடக்கு மாதகல் பகுதியில் அதிகளவில் வெங்காய செய்கை மேற்கொள்ளப்பட்டது. எனினும் அண்மையில் பெய்த மழை காரணமாக வெங்காய செய்கை பாதிக்கக்கப்பட்டுள்ளது.

வெங்காய செய்கை மேற்கொள்ளப்பட்ட நிலங்களில் வெள்ளம் தேங்கியுள்ளதால் அதனை அறுவடை செய்ய முடியாத துர்ப்பாக்கிய நிலைமை விவசாயிகளுக்கு ஏற்பட்டுள்ளது.

இதனால் தாம் பொருளாதார ரீதியில் பாதிக்கப்பட்டுள்ளதாக விவசாயிகள் அங்கலாய்க்கின்றனர்.

அறுவடைக்கு இன்னும் சில நாட்களேயுள்ள நிலையில் இவ்வாறு இடம் பெற்றுள்ளது.

இந்நிலையில் அடுத்த கட்ட நடவடிக்கையாக மீண்டும் வெங்காயச் செய்கையை மேற்கொள்வதற்கு விதை வெங்காயம் தங்களிடம் இல்லை எனவும் தெரிவிக்கின்றனர்.

தற்போதைய நிலையில் விதை வெங்காயம் வாங்கி செய்கை மேற்கொண்ட வசதிகள் தங்களிடம் இல்லை எனவும் தெரிவிக்கின்றனர்.

எனவே சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இது தொடர்பில் கவனம் செலுத்துவதுடன் நிவாரணங்களை பெற்றுத் தரவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர். (5)

# 'இணுவை இந்து நாதம்' வெளியீட்டு விழா

(யாழ்ப்பாணம்)

இணுவில் இந்துக் கல்லூரியின் 2020 ஆம் ஆண்டுக்கான தேசிய வாசிப்பு மாதத்தினையொட்டி இணுவை இந்து நாதம்-4 சஞ்சிகை வெளியீட்டு நிகழ்வு அதிபர் வே. உதயமோகன் தலைமையில் எதிர்வரும் 27 ஆம் திகதி புதன்கிழமை 8 மணிக்கு நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வலிகாமம் கல்வி வலய உதவிக் கல்விப் பணிப்பாளர் (வர்த்தகம்) சு. ஸ்ரீகுமரன் கலந்து கொள்வார். (5)

# இலங்கை குறித்து மோசமான அறிக்கை வெளியிடவுள்ள மனித உரிமைகள் ஆணையாளர்?

(கொழும்பு)

**ஜெனிவாவில் எதிர்வரும் மாதம் இடம்பெறவுள்ள ஐ.நா.மனித உரிமைகள் பேரவையின் அமர்வில் ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் ஆணையாளர் மிச்சேல் பச்லெட் இலங்கை குறித்து ஒரு மோசமான அறிக்கையை வெளியிடுவார் என ஆங்கில ஊடகமொன்று செய்தி வெளியிட்டுள்ளது.**

ஜெனிவா அமர்வுக்கு முன்னதாக இந்த அறிக்கையின் நகல் வெளியிடப்படும் எனவும் அறிக்கையின் நகல் பகிரங்கப்படுத்தப்படுவதற்கு முன்னர் அதன் பதில் உரிமைக்காக இலங்கை அரசுக்கு குறித்த அறிக்கை அனுப்பப்பட்டுள்ளது.

குறித்த அறிக்கையின் நகலை இலங்கை பெற்றிருப்பதை இராஜாங்க அமைச்சர் தாரக பாலசூரிய உறுதிப்படுத்தியுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

எவ்வாறாயினும் நேற்று முன்தின நிலைவரப்படி இந்த அறிக்கைக்கு இலங்கை தனது பதிலை இன்னும் சமர்ப்பிக்கவில்லை என்றும் அவர் தெரிவித்தார்.

ஐ.நா.மனித உரிமைகள் பேரவையின் 46 ஆவது அமர்வின் நிகழ்ச்சி நிரலில் பெப்ரவரி 22 முதல் மார்ச் 19 வரை நடைபெறவுள்ள அமர்வுகளில் இலங்கை உள்ளது.

குறித்த அமர்வின் போது, இலங்கையில் நல்லிணக்கம், பொறுப்புக்கூறல் மற்றும் மனித உரிமைகளை மேம்படுத்துவதில் கடமைகள் நிறைவேற்றப்படுவதை உறுதி செய்வதில் அரசாங்கத்தின் தற்போதைய மற்றும் முன்னாள் தோல்வி குறித்து மிச்சேல் பச்லெட் விமர்சனங்களை எழுப்புவார் என்று எதிர்பார்க்கப்படுவதாகவும் குறித்த செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (நி-4)

# பணியாளருக்கு தொற்று தபால் நிலையம் பூட்டு

(கொழும்பு)

பணியாளர் ஒருவருக்கு கொவிட் தொற்று ஏற்பட்டதன் காரணமாக, தெஹிவளை தபால் நிலையம் மூடப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

தெஹிவளை தபால் நிலையத்தில் கடமையாற்றி வரும் பெண் பணியாளர் ஒருவர் கொவிட் தொற்றினால் பாதிக்கப்பட்டுள்ளார்.

இதன் காரணமாக தபால் நிலையத்தினை தற்காலிகமாக மூடுவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது என சுகாதார பிரிவினர் தெரிவிக்கின்றனர்.

கடந்த திங்கட்கிழமை பணிக்கு வந்த குறித்த பெண் உத்தியோகத்தர் சுகயீனம் காரணமாக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட போது மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனைகளின் மூலம் அந்தப் பெண்ணுக்கு கொவிட் தொற்று உறுதியாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-4)

# ஸ்ரீலங்கன் ஏர்லைன்ஸிற்கு அபராதம் விதித்தது இந்திய நீதிமன்றம்

(கொழும்பு)

இந்திய சட்டத்தை பின்பற்றாத குற்றத்துக்காக இலங்கையின் தேசிய விமான நிறுவனமான ஸ்ரீலங்கன் ஏர்லைன்ஸ்க்கு இந்திய நீதிமன்றம் 50,000 ரூபா அபராதம் விதித்து தீர்ப்பளித்துள்ளது.

புதுடில்லியின் நீதிமன்றம் ஒன்றே இந்தத் தீர்ப்பை வழங்கியுள்ளது.

தொழில் செய்யும் இடத்தில் பெண்களுக்கு எதிரான பாலியல் துன்புறுத்தலை தடுக்கும் "போஷ்" சட்டத்தின் கீழ் இந்தத் தண்டனை வழங்கப்பட்டுள்ளது. (நி-4)


# தமிழ் மொழியை விசேட தகைமையாக கருதுவது அரசியல் அமைப்பிற்கு முரணான செயலாகும்

(கொழும்பு)

பொலிஸ் பரிசோதகர் நியமனத்தில் தமிழ் மொழியில் தேர்ச்சி பெற்றிருப்பது விசேட தகைமையாகக் கருதப்படும் என்று குறிப்பிடப்பட்டுள்ளமை அரசியலமைப்பின் 12(1) அத்தியாயத்திற்கு முரணாகும் என தேசத்தை பாதுகாக்கும் தேசிய அமைப்பின் தலைவர் எல்லே குணவங்க தேரர் தெரிவித்தார்.

மொழி அடிப்படையில் நியமனம் வழங்கினால் முஸ்லிம் இனத்தவர்கள் அதிகளவில் உள்வாங்கப்படுவார்கள். இது அரசியலமைப்பிற்கும் நாட்டு மக்களுக்கும் இழைக்கும் துரோகமாகும்.

இவ்வாறான செயற்பாடுகளை முன்னெடுப்பதை தவிர்த்துக் கொள்ள வேண்டும் என சுட்டிக்காட்டி தேசத்தை பாதுகாக்கும் தேசிய அமைப்பின் தலைவர் எல்லே குணவங்க தேரர் 12 பேரின் கையொப்பத்துடன் ஜனாதிபதிக்கு கடிதம் அனுப்பி வைத்துள்ளார்.



அக்கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது, நீதியமைச்சர் ஜனாதிபதியிடம் முன்வைத்துள்ள கோரிக்கைக்கமைய பொலிஸ் திணைக்களத்துக்காக பொலிஸ் பரிசோதகர் பதவிக்கு 150 சட்டத்தரணிகளை இணைத்துக் கொள்ளவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. பொலிஸ் பரிசோதகர் பதவிக்கு இணைத்துக் கொள்ளப்படுபவர்கள் தமிழ் மொழியில் தேர்ச்சி பெற்றுள்ளமை விசேட தகைமையாகக் கொள்ளப்படும் என குறிப்பிடப்பட்டுள்ளது. இஸ்லாமிய அடிப்படைவாதத்துக்கு சார்பாக அமையும் மற்றுமொரு செயற்பாடாக இதனைக் கருத வேண்டும்.

முஸ்லிம் மக்களின் சனத்தொகை அதிகரித்த வண்ணம் உள்ளது. சட்டத்துறையிலும் முஸ்லிம் சமூகத்தினர் அதிகளவில் ஈடுபட்டுள்ளார்கள். தமிழ் மொழியில் தேர்ச்சி விசேட தகைமை என்பதை நடைமுறைப்படுத்தினால் முஸ்லிம் சமூகத்தினரில் பெரும்பாலானோர் பொலிஸ் பரிசோதகர்களாக இணைத்துக் கொள்ள வாய்ப்புண்டு.

குறுகிய காலத்தில் முஸ்லிம் சமூகத்தினர் சட்டக்கல்லூரிக்கு அதிகளவில் உள்வாங்கப்பட்டமை சந்தேகத்துக்குரியது. அத்துடன் நீதிமன்ற சேவை மொழிபெயர்ப்பாளர்களாகவும் செயற்படுகிறார்கள். இவ்வாறான நிலையில் பொலிஸ் பரிசோதகர்களாக முஸ்லிம் சமூகத்தின் சட்டத்தரணிகள் அதிகம் இணைத்துக் கொள்ளப்பட முயற்சிப்பதன் உள்நோக்கம் அவதானத்திற்குரியது.

பயங்கரவாதி சஹ்ரானின் குண்டுத்தாக்குதலின் பின்னர் பள்ளிவாசல்களில் இருந்து கைப்பற்றப்பட்ட பெருந்தொகையான ஆயுதங்கள் எந்த நோக்கங்களை அடிப்படையாகக் கொண்டது என்பது இன்றுவரை பகிரங்கப்படுத்தப்படவில்லை.

மேலும், நீதி அமைச்சரினால் முன்னெடுக்கப்பட்டுள்ள அரசியலமைப்புக்கு முரணான மற்றும் மக்களுக்கு துரோகமிழைக்கும் செயற்பாடுகளை செயற்படுத்த வேண்டாம் என ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்திய மக்களின் ஒருவராக கோரிக்கை விடுக்கிறோம் என அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (நி-4)

# ஷானி உள்ளிட்ட மூவருக்கு விளக்கமறியல் நீடிப்பு

(கொழும்பு)

குற்றப்புலனாய்வு திணைக்களத்தின் முன்னாள் பணிப்பாளர் ஷானி அபேசேகர உள்ளிட்ட 3 சந்தேக நபர்களும் எதிர்வரும் 3 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

கம்பஹா பதில் நீதவான் மகேஷ் ஹேரத்முன்னிலையில்வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போதே விளக்கமறியல் நீடிப்பு உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

பொய் சாட்சியத்தை உருவாக்கி, நீதிமன்ற புறக்கணிப்பில் ஈடுபட்டமை அடங்கலாக சில குற்றச்சாட்டுகளின் கீழ் சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

ஷானி அபேசேகர, எம்பிலிப்பிட்டி பொலிஸ் நிலையத்தின் முன்னாள் உப பொலிஸ் இன்ஸ்பெக்டர் மோஹன மென்டிஸ்மற்றும் ஓய்வுபெற்ற உப பொலிஸ் இன்ஸ்பெக்டர் எச்.டி.நவரத்ன ஆகியோரே விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

வழக்கின் நான்காவது சந்தேகநபரான எச்.டி.நவரத்ன பிரேமதிலக்கவிடம் மஹர சிறையில் வைத்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளதாக கொழும்பு குற்றத்தடுப்பு பிரிவினர் நீதிமன்றத்திற்கு அறிவித்துள்ளனர். (நி-4)


## ஆதனவரி செலுத்துதல் தொடர்பான அறிவித்தல்- நல்லூர் பிரதேச சபை

நல்லூர் பிரதேச சபை எல்லைக்குட்பட்ட ஆதன உரிமையாளர்/குடியிருப்பாளர்கள் நன்மைகருதி இம் மாதம் வார இறுதிநாட்களில் (சனி, ஞாயிறு) மு.ப 8.30 மணி முதல் பி.ப 3.00 மணிவரை உப அலுவலகங்கள் திறந்திருக்கும் என்பதுடன் 2021 ஆம் ஆண்டிற்கான ஆதனவரியை குடியிருப்பாளர்கள் செலுத்தி 10 வீதம் கழிவை பெற்றுக் கொள்வதுடன் கடந்த வருடங்களில் செலுத்தப்படாத ஆதன நிலுவை தொகைகளைச் செலுத்தி சபைக்கு ஒத்துழைப்பு வழங்குவதுடன் சபையால் எடுக்கப்படும் சட்ட நடவடிக்கைகளில் இருந்து தங்களைத் தவிர்த்துக் கொள்ளுமாறும் இத்தால் அறியத்தரப்படுகின்றது.

ப.மயூரன்,
தவிசாளர்,
நல்லூர் பிரதேச சபை.

(C-1222)

# சிவபுரம் கிராமத்து வீதிகளை புனரமைக்குமாறு கோரிக்கை



(அக்கராயன்)

சிவபுரம் கிராமத்து வீதிகள் மக்கள் போக்குவரத்துச் செய்ய முடியாத நிலையில் காணப்படுகின்றன.

கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள பரந்தன் சிவபுரம் கிராமத்தில், அங்குள்ள மக்கள் தினமும் போக்குவரத்துச் செய்யும் வீதிகள் கவனிப்பாரற்ற நிலையில் நீண்டகாலமாகத் புனரமைக்கப்படாத நிலையில் குண்டும் குழியுமாகவும் சேறும் சகதியுமாகவும் மிகவும் மோசமான நிலையில் காணப்படுகின்றன.

இதனால் இவ்வீதியால் பயணிக்கும் பெருமளவான மக்கள் கடும் சிரமங்களை எதிர் நோக்குகின்றனர்.

கிளிநொச்சி மாவட்டச் செயலகத்தின் அனர்த்த முகாமைத்துப் பிரிவினது கடந்த காலக் கலந்துரையாடல்களில் சிவபுரம் கிராமம் மழை வெள்ளத்தால் பாதிக்கப்படுகின்றமை தொடர்பிலும் அக்கிராமத்திற்கு சீரான வடிகாலமைப்புக்களை ஏற்படுத்தி கிராமத்து வீதிகளைத்திருத்தியமைக்க ப்பட வேண்டியதன் முக்கியத்துமும் முன்வைக்கப்பட்டுக் கலந்துரையாடித் தீர்மானங்கள் எடுக்கப்பட்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

இவ்விடயம் தொடர்பாக உரியவர்கள் கவனம் செலுத்தி பரந்தன் சிவபுரம் கிராமத்து வீதிகளை புனரமைத்து மக்கள் சிரமமின்றிப் பயணிக்க உதவுமாறு கிராம மக்கள் கோரி நிற்கின்றனர். (5-350)

# வவுனியாவில் பி.சி.ஆர்.பரிசோதனை ஒத்துழைப்பு வழங்கும் வர்த்தகர்கள்

(நெளுக்குளம்)

வவுனியா கந்தசாமி கோவில் வீதி மற்றும் அதனை அண்டிய பகுதிகளைச் சேர்ந்த வியாபார நிலையங்களின் உரிமையாளர்கள் மற்றும் ஊழியர்களிடம் அன்டிஜன் பரிசோதனைக்கான மாதிரிகள் நேற்று பெறப்பட்டன.

வவுனியா நகரப்பகுதியில் எழுமாறாக நடத்தப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனையில் 55 கொரோனாத் தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்ட நிலையில் வவுனியா நகரின் ஒரு பகுதி கடந்த சில நாட்களாக முற்றாக முடக்கப்பட்டுள்ளது.

அந்தப் பகுதிகளைச் சேர்ந்த அனைத்து வர்த்தக நிலையங்களின் உரிமையாளர்கள் மற்றும் ஊழியர்களுக்கு பி.சி.ஆர். பரிசோதனை செய்யப்பட்டு அதன் முடிவுகளும் கிடைக்கப் பெற்றுள் ளன.

இந்நிலையில் அடுத்த வாரமளவில் நகரத்தில் முடக்கப்பட்ட பகுதிகளை திறப்பதற்கான நடவடிக்கைகளை சுகாதார பிரிவினர் முன்னெடுத்துள்ளனர்.

அந்தவகையில் இதுவரை பி.சி.ஆர். பரிசோதனையை முன்னெடுக்காத ஊழியர்கள் மற்றும் வர்த்தகர்கள் என 250 பேருக்கு வவுனியா நகரசபை மண்டபத்தில் வைத்து அன்டிஜன் பரிசோதனை முதற்கட்டமாக நேற்று முன்னெடுக்கப்பட்டுள்ளது.

அன்டிஜன் பரிசோதனையில் தொற்று உறுதிப்படுத்தப்படுபவர்கள் தனிமைப்படுத்தப்பட்டு பி.சி.ஆர். பரிசோதனை முன்னெடுப்பதற்கான ஏற்பாடுகள் செய்யப்படவுள்ளன.

குறித்த நடவடிக்கைகளிற்கு வவுனியா வர்த்தக சங்கம் தமது ஒத்துழைப்புகளை வழங்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (5-299)

# யானைகளின் தொல்லைகளால் பாதிக்கப்படும் பொருளாதாரம்

(அக்கராயன்)

கிளிநொச்சி ஜெயபுரம் கிராமத்தில் யானைகளின் தொல்லைகளைக் கட்டுப்படுத்துமாறு பூநகரி பிரதேச செயலாளரிடம் ஜெயபுரம் வடக்கு கிராம மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

ஜெயபுரம் கிராம உத்தியோகத்தர் பிரிவில் உள்ள சுண்ணாவில் கிராமத்தில் அமைந்துள்ள ஐம்பது ஏக்கர் மரமுந்திரிகைத் தோட்டத்தினை யானைகள் அழித்து வருவதுடன் ஜெயபுரம் வடக்கின் குடிமனைகளுக்குள் வரும் யானைகள் பயன்தரும் மரங்களையும் அழித்து வருகின்றன.

யானைகளின் தொல்லை தொடர்பாக கிராம உத்தியோகத்தர் ஊடாக பூநகரிப் பிரதேச செயலாளருக்கும் தகவல்கள் வழங்கப்பட்டுள்ளன.

பூநகரியில் இருந்து பல்லவராயன்கட்டுச் சந்திக்கிடையில் மாலை 4 மணிக்கே யானைகள் வீதிக்கு வருவதன் காரணமாக போக்குவரத்தில் ஈடுபடுகின்ற மக்கள் பெரும் அச்சம் கொண்டுள்ளனர். ஜெயபுரத்தில் இருந்து மண்ணியாகுளம் ஊடாக வன்னேரிக்குளம் செல்லும் வீதி, ஜெயபுரத்தில் இருந்து வன்னேரிக்குளம் அணைக்கட்டின் கீழாக செல்லும் வீதிகளில் யானைகளின் நடமாட்டம் கூடுதலாகக் காணப்படுகிறது. (5-350)



வவுனியா ஓமந்தை பிரிவிலுள்ள மாணவர்கள் 52 பேருக்கு சமூக ஆர்வலர் சுரேசினால் நேற்று கற்றல் உபகரணங்கள் வழங்கி வைக்கப்பட்டுள்ளன. வவுனியா புதிய சின்னக்குளம் அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலையில் அதிபர் து.ஜெனானந்தசிவம் தலைமையில் 24 மாணவர்களுக்கும் கடந்த வாரம் ஓமந்தைப் பிரதேசத்தில் பாடசாலை செல்லும் 28 மாணவர்களுக்கும் வழங்கி வைக்கப்பட்டுள்ளன. (படம்:- சதீஸ்)

# ஒரு இலட்சம் காணித்துண்டுகள் தொடர்பான கலந்துரையாடல்

(தருமபுரம்)

அரசாங்கத்தின் ஒரு இலட்சம் காணித்துண்டுகளை தொழில் முயற்சியாளர்களுக்கு வழங்குவது தொடர்பான கலந்துரையாடல் ஒன்று காணி ஆணையாளர் நாயகத்தின் தலைமையில் கிளிநொச்சியில் அமைந்துள்ள வடமாகாண முகாமைத்துவ பயிற்சி நிலைய மண்டபத்தில் நேற்று நடைபெற்றது.

இக்கலந்துரையாடலில் ஐந்து மாவட்டங்களின் மாவட்ட அரசாங்க அதிபர்கள், பிரதேச செயலாளர்கள், மாகாண காணி ஆணையாளர் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். (5-316)




கருகம்பனை இந்து இளைஞர் கழகமும் சித்திரமேழி பழனியானந்தன் சனசமூக நிலையமும் இணைந்து முன்னெடுக்கும் விதையனைத்தும் விருட்சமே செயற்றிட்டத்தின் கீழ் கிளிநொச்சி மாவட்டத்தில் கரைச்சி, கண்டாவளை, பச்சிலைப்பள்ளி பிரதேச செயலக பிரிவுகளில் தெரிவு செய்யப்பட்ட 103 பாடசாலை மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் கடந்த ஞாயிற்றுக்கிழமை வழங்கி வைக்கப்பட்டன. (படம்:- தவசீலன்)

# குழந்தையின் காதுக்குள் குன்றிமணி; வைத்தியசாலையின் அசமந்தப்போக்கு

(நெளுக்குளம்)

வவுனியா வைத்தியசாலையில் நான்கு வயது குழந்தைக்கு சிகிச்சை அளிப்பதில் ஏற்பட்ட அசமந்தப் போக்கு பாராளுமன்ற உறுப்பினர் கு.திலீபனின் தலையீட்டினால் தீர்த்து வைக்கப்பட்டது.

இது தொடர்பாக மேலும் தெரியவருவதாவது,

நேற்று முன்தினம் வவுனியாவைச் சேர்ந்த 4 வயது குழந்தையின் காதினுள் குன்றிமணி ஒன்று போன நிலையில் இரவு 10 மணிக்கு வவுனியா வைத்தியசாலைக்கு சிகிச்சைக்காகச் சென்றபோது வலியால் துடித்த குறித்த குழந்தை வைத்தியசாலை விடுதியில் அனுமதிக்கப்பட்டது.

அவ்வாறு அனுமதிக்கப்பட்டும் குழந்தைக்கு எந்தவித சிகிச்சையும் வழங்கப்படவில்லை எனப் பெற்றோர் தெரிவித்தனர்.

அத்துடன் வைத்தியர் கடமையில் இல்லை என்று தெரிவித்து நாளையதினம் கிளினிக்கில் சிகிச்சை பெறுமாறு கூறி குழந்தையின் தாயிடம் இருந்து சுயவிருப்பின் பேரில் தாதியால் கடிதம் ஒன்று பெற்றுக்கொள்ளப்பட்டு அனுப்பி வைத்துள்ளனர்.

இந்நிலையில் குழந்தையை வீட்டிற்கு அழைத்துச் சென்ற பெற்றோர் நேற்றுக் காலை வவுனியா வைத்தியசாலை கிளினிக்கிற்கு அழைத்துச் சென்ற போதும் உடனடியாக சிகிச்சை வழங்காமல் அலைக்கழிக்கப்பட்டதாக குழந்தையின் பெற்றோர் தெரிவித்தனர்.

இதனையடுத்து குறித்த விடயம் பாராளுமன்ற உறுப்பினர் கு.திலீபனின் கவனத்திற்குக் கொண்டு செல்லப்பட்டது.

அவர் உடனடியாக வைத்தியசாலைக்குச் சென்று இச்சம்பவம் தொடர்பாக உரியவர்களுடன் கலந்துரையாடிய நிலையில் அக்குழந்தையின் காதில் இருந்து குன்றுமணி வெளியே எடுக்கப்பட்டது. (5-4-299)

## இராசிபலன்

22.01.2021
தை 09, வெள்ளிக்கிழமை
நவமி முன்னிரவு 7.11 மணிவரை
பரணி முன்னிரவு 7.28 மணிவரை
சுபநேரம் 6.35-8.05 மணிவரை
இராகுகாலம் 11.05-12.35 மணிவரை
சந்திராஷ்டமம்- அத்தம், சித்திரை

வளவன்


மேஷம்

வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள், கௌரவமானவர்களின் சந்திப்பு இடம் பெறலாம், எடுத்த காரியங்களில் அதிக பிரயாசை காட்டுவீர்கள், போசன சுக முண்டு.


ரிஷபம்

வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள், சுபகாரியச் செலவுகள் அதிகரிக்கும் நாள், சயன சுகக் குறைவு ஏற்படலாம், எடுத்த காரியங்களில் சிறு தாமதங்கள் ஏற்படலாம்.


மிதுனம்

குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் இடம்பெறலாம், வழிபாட்டுச் சிந்தனை மேலோங்கும் நாள், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், காரிய அனுகூலமுண்டு.


கடகம்

செய் தொழில் மேன்மையுண்டு, உறவினர்களும் நண்பர்களும் வலிய வந்து உதவுவார்கள், மகிழ்ச்சி தரும் செய்திகள் வந்து சேரலாம், எடுத்த முயற்சிகள் எளிதில் கைகூடும்.


சிம்மம்

தொழில் சம்பந்தமாக புதிய திட்டங்கள் தீட்டுவீர்கள், பயணங்களால் பலனுண்டு, எடுத்த காரியங்களில் அதிக பிரயாசை காட்டும் சூழ்நிலை ஏற்படலாம், ஆரோக்கியம் சீராகும்.


கன்னி

வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள், பிரயாணங்களின் போது விழிப்புணர்வு அவசியம், பணப்பற்றாக்குறை ஏற்படலாம், புதிய பொறுப்புக்களை யோசித்து ஏற்பது நல்லது.


துலாம்

கௌரவமான சம்பவங்கள் இடம்பெறலாம், பொருளாதார நிலை உயர வழிவகை செய்வீர்கள், ஆன்மிக சிந்தனை மேலோங்கும் நாள், காரிய அனுகூலமுண்டு.


விருச்சிகம்

செய்தொழில் மேன்மையுண்டு, செயற்பாடுகளில் தீவிரம் காட்டுவீர்கள், எதிர்ப்பாக இருந்தவர்கள் மனம் மாறுவர், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.


தனுசு

புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், பிள்ளைகளின் கல்வி முன்னேற்றத்தில் அக்கறை கூடும், பூர்வீகச் சொத்துக்களால் ஆதாயமுண்டு, வழிபாட்டில் ஆர்வம் கூடும்.


மகரம்

குடும்பத்தினருடன் பயணங்கள் செல்லப் போட்ட திட்டங்கள் கைகூடும், செய்தொழிலில் ஆர்வம் காட்டுவீர்கள், வீட்டுத் தேவைகளை நிறைவு செய்யும் எண்ணம் உருவாகும், போசன சுகமுண்டு.


கும்பம்

புதிய முயற்சிகள் எளிதில் கைகூடும், தெய்வீக சிந்தனை மேலோங்கும் நாள், பொருளாதார நிலையில் முன்னேற்றம் காண்பீர்கள், உறவினர்கள் வழியில் ஒத்துழைப்புக்கள் கிடைக்கும்.


மீனம்

வாக்கு மேன்மையுண்டு, கொடுக்கல்-வாங்கல்கள் ஒழுங்காக முயற்சி எடுப்பீர்கள், வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள், செயற்பாடுகளில் தீவிரம் காட்டுவீர்கள்.

பிச்சைக்காரனாய் வாழ்வதைவிட பிச்சைக்காரனாய் இறப்பது மேல்

# அபிவிருத்தி அடைந்த நாடாக நம் நாடு மாறும் நாள் வெகு தொலைவில் இல்லை

## பாதணி தொழிற்சாலை திறப்பு நிகழ்வில் பிரதமர்



(கொழும்பு)

குண்டூசியேனும் தயாரிக்காத நாடு என்று இனியும் நம்மை நாமே குறை கூறிப் பலனில்லை என பிரதமர் மகிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

பன்னிப்பிட்டிய, மாகும்புர பிரதேசத்தில் நிறுவப்பட்ட யோ பிராண்ட் (Yoo Brand) பாதணி தொழிற்சாலையை நேற்று முன்தினம் திறந்து வைக்கும் நிகழ்வில் காணொளி தொழில்நுட்பம் ஊடாக கலந்து கொண்ட பிரதமர் மகிந்த ராஜபக்ஷ இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இன்றைய தினம் நாட்டு மக்கள் அனைவருக்கும் மகிழ்ச்சியடையக் கூடியதொரு நாளாகும். எமது நாட்டின் எதிர்காலம் குறித்து இலங்கையர்களான நம் அனைவருக்கும் எதிர்பார்ப்புகள் உள்ளன. அனைவரும் காண்பது ஒரே கனவு. அது நம் நாடு அபிவிருத்தியடைந்த நாடாகும் கனவாகும்.

இன்று ஆரம்பிக்கப்படும் இந்த பாதணி தொழிற்சாலை முழு நாட்டிற்குமான சொத்தாகும். உள்ளூர் சந்தையில் விற்பனை செய்யப்படும் பாடசாலை பாதணிகளை விட 30 சதவீம் குறைவாக இத்தொழிற்சாலையின் பாதணிகள் விற்பனை செய்யப்படும். அதே போன்று விளையாட்டு மற்றும் நடைப் பயிற்சியின் போது அணியும் பாதணிகள் சர்வதேச தரத்திற்கு ஏற்ப உயர் தரத்தில் தயாரிக்கப்படும்.

இந்த அனைத்து பாதணிகளும் Made In Sri Lanka என்ற எண்ணக்கருவை அடிப்படையாகக் கொண்டே தயாரிக்கப்படும். சுபீட்சத்தின் நோக்கு கொள்கையின்படி, உள்ளூர் பொருளாதாரக் கொள்கைக்குள் இந்த நாட்டை அபிவிருத்தி செய்வதே எங்கள் குறிக்கோள். இறக்குமதியைக் கட்டுப்படுத்துவதன் மூலம், எங்கள் உள்ளூர் விவசாயிகளையும் தொழிலதிபர்களையும் முன்னேற்ற விவேகமான முடிவை எடுத்தோம். மஞ்சள் மட்டுமல்ல, நம் நாட்டில் உற்பத்தி செய்யப்படும் மசாலாப் பொருட்களும் இறக்குமதி செய்யப்படுவதை நிறுத்தினோம். இப்போது நம் நாட்டின் விவசாயிகள் தானாகவே பயனடைகின்றனர். மறுபுறம் நம் நாட்டில் உயர்தர தயாரிப்புகளை நுகரும் வாய்ப்பும் பொது மக்களுக்குக் கிடைக்கும்.

இந்த தொழிற்சாலைகள் இன்று முதல் பாதணிகளை உருவாக்கத் தொடங்கும் போது, இறப்பர் செய்கையாளர்களும் பொருளாதார ரீதியாகப் பயனடைவர்கள். அவர்களின் குடும்பங்களின் வருமானம் அதிகரிக்கும். அது மட்டுமல்லாமல், நமது இளைஞர்களுக்கு வேலை வாய்ப்புகள் உருவாகும்.

இதுபோன்ற ஒரு தொழிற்சாலையில் தொழில்நுட்ப அறிவைப் பெற சில நேரங்களில் நீங்கள் வெளிநாடு செல்ல வேண்டியிருக்கும். நம் இளைஞர்கள் இப்போது இவ்வாறு அந்த அறிவைப் பெற முடியும். இவை அனைத்தும் ஒன்றாகச் சேர்க்கப்படும்போது மதிப்பு மிகுந்த உற்பத்தியின் பொருளாதார நன்மைகள் ஒட்டுமொத்தமாக நாட்டிற்குக் கிடைக்கும்.

எனவே, ஒரு குண்டூசியேனும் தயாரிக்காத ஒரு நாடு என்று நம்மை நாம் குறைக் கூறிக் கொள்வதில் பயனில்லை. நாம் கடந்த காலத்திலிருந்து நல்லதை பெற்று எதிர்காலத்திற்காக இன்று நாம் செயற்படுத்த வேண்டும்.

ஒரு வளமான நாட்டை நோக்கிய பயணத்திற்கு அத்தகைய ஒரு தொழிற்சாலையின் சக்தி மகத்தானது. சம்பந்தப்பட்ட அனைவருக்கும் வாழ்த்துக்கள் என அவர் தெரிவித்தார். (நி-4)

# இந்த மாதமாவது ஆயிரம் கிடைக்குமா?

## அநுர கேள்வி



(கொழும்பு)

தோட்டத் தொழிலாளர்களின் நாளாந்த கொடுப்பனவாக ஆயிரம்ரூபாவை பெற்றுக்கொடுப்பதாக அமரர் ஆறுமுகன் தொண்டமானின் பூதவுடலுக்கு முன்னாள் நின்று கொண்டு பிரதமர் வாக்குறுதியளித்தாரே அந்த வாக்குறுதிக்கு என்னவானது? இம்மாதம் இறுதியிலாவது ஆயிரம் ரூபா நாளாந்த கொடுப்பனவு கிடைக்குமா? என ஜே.வி.பியின் தலைவர் அநுர குமார திசாநாயக்க சபையில் ஆளும் தரப்பை பார்த்து கேள்வி எழுப்பினார்.

தோட்டத் தொழிலாளர்கள் அரசாங்கத்தினால் தொடர்ச்சியாக ஏமாற்றப்பட்டுக்கொண்டே உள்ளனர் எனவும் அவர் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் புதன்கிழமை அரசாங்கத்தின் வர்த்தமானி அறிவித்தல்களை நடைமுறைப்படுத்தாமை குறித்த சபை ஒத்திவைப்பு பிரேரணையின் சபையில் முன்வைத்து உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் சட்டங்களை இயற்றினாலும் ஒரு சிலர் தமது விருப்பத்திற்கு அமைய சட்டங்களை மீற எவ்வாறு அனுமதிக்க முடியும். ஜனநாயக யுகத்திற்கு ஏற்ற வேலைத் திட்டங்கள் அனைத்தையும் மீறி கற்கால யுகத்திற்கு ஏற்றாற்போல் ஆட்சியை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ முன்னெடுக்கின்றார்.

ஊழல், மோசடிகளுக்கு அரசாங்கம் துணை போவதையே இது வெளிப்படுத்துகின்றது.

எனவே அரசாங்கம் விடும் பல வர்த்தமானி அறிவித்தல்கள் கொள்ளையர்களைக் காப்பாற்றும் மக்களைக் கஷ்டப்படுத்தும் வர்த்தமானியாகும்.

அதேபோல் மாடறுப்பை நிறுத்துவதாக பிரதமர் பாராளுமன்றத்தில் தெரிவித்தார், அமைச்சரவையில் அதற்கான அங்கீகாரம் கிடைத்ததாகக் கூறினார்கள். இப்போது வரையில் அதற்கான இறுதித் தீர்மானம் ஒன்று இல்லை. பிரதமரும் அமைச்சர்களும் தத்தமது நோக்கங்களுக்காக பொய்யாகக் காரணிகளைக் கூறிக்கொண்டு மக்களை ஏமாற்றுவதாகவே இது அமைந்துள்ளது.

எமது நாட்டில் சம்பிரதாயம் ஒன்றும் உள்ளது. பிணத்திற்கு முன்னால் வாக்குறுதி ஒன்றினை வழங்குவது சத்தியப் பிரமாணம் செய்வதற்குச் சமமானது என்று. அவ்வாறே அமரர் ஆறுமுகன் தொண்டமானின் பூதவுடலுக்கு முன்னால் நின்று கொண்டு பிரதமர் மக்களுக்குச் சத்தியம் செய்தார்.

தொண்டமான் என்னை இறுதியாக சந்தித்த வேளையில் ஆயிரம் ரூபாய் குறித்தே பேசினார் எனவும் பிரதமர் கூறினார். அதன் பின்னரும் பல்வேறு வாக்குறுதிகள் கொடுக்கப்பட்டன.

ஆனால் இன்றுவரை தோட்டத் தொழிலாளர்களுக்கு கொடுத்த வாக்குறுதிகள் பொய்யான வாக்குறுதிகளாகவே மாற்றப்பட்டு வருகின்றன.

இந்த மாதம் இறுதியில் தோட்டத் தொழிலாளர்களுக்கு ஆயிரம் ரூபாய் கொடுப்பனவு கிடைக்குமா? என அரசாங்கத்தைக் கேட்கிறேன் என அவர் கேள்வி எழுப்பினார். (நி-4)

# அமெரிக்க வரலாற்றில் அடுத்த அத்தியாயத்தை எழுதுவோம்

## பதவியேற்பில் பிடன் உறுதி





(வோஷிங்டன்)

அமெரிக்காவின் 46ஆவது ஜனாதிபதியாக ஜோ பிடன் நேற்று முன்தினம் புதன்கிழமை பதவியேற்றுள்ளார்.

இந்தப் பதவியேற்ப நிகழ்வு வோஷிங்டன், கபிட்டல் நகரில் உள்ள பாராளுமன்ற வளாக முன்றலில் நடைபெற்றது.

இதன்போது, துணை ஜனாதிபதி கமலா ஹாரிஸ் தனது உறுதிமொழியையும் ஏற்றுக் கொண்டதுடன் துணை ஜனாதிபதியான முதல் பெண்மணி என்ற பெருமையையும் பெற்றுள்ளார்.

இந்த விழாவில், முன்னாள் ஜனாதிபதிகளான பராக் ஒபாமா, ஜோர்ஜ் டபிள்யூ புஷ் மற்றும் பில் கிளின்டன் ஆகியோர் கலந்து கொண்டதுடன் முன்னாள் துணை ஜனாதிபதி மைக் பென்ஸ் கலந்துகொண்டார்.

இந்நிலையில், பதவியேற்ற பின்னர் உரை நிகழ்த்தியுள்ள ஜோ பிடன், 'பதவியேற்பு நாள் அமெரிக்க ஜனநாயகத்தின் நாள்' எனத் தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

"ஜனநாயகம் விலை மதிப்பற்றது. இரு கட்சிகளையும் சேர்ந்த அமெரிக்க முன்னாள் ஜனாதிபதிகள் அனைவருக்கும் நன்றி!

அமெரிக்க பாராளுமன்ற உறுப்பினர்கள் உள்ளிட்ட அனைவருக்கும் வாழ்த்துக்கள்! அத்துடன், துணை ஜனாதிபதியான கமலா ஹாரிஸுக்கும் எனது வாழ்த்துக்கள்!

அமெரிக்காவில் பல சோதனைகளைக் கடந்து மக்களாட்சி வென்றுள்ளது. தொலைதூரம் கடந்து வந்துள்ளோம், இன்னும் நிறைய தூரம் செல்ல வேண்டும். இன்னும் நிறைய காயங்களை ஆற்ற வேண்டியுள்ளதுடன் இன்னும் சீரமைக்கவும் வேண்டியுள்ளது. ஒவ்வொரு அமெரிக்கர்களும் இணைந்து செயற்பட வேண்டிய தருணம் இதுவாகும்.

கொரோனாவால் பல உயிர்கள் பறிபோயுள்ளன. கொரோனாக் கொடுந்தொற்றை வென்று மீள்வோம்.

அதேபோல், ஜனநாயக வன்முறையை முறியடித்துள்ளோம். இந்நிலையில், கொரோனாப் பெருந்தொற்று, வன்முறைகள் போன்றவற்றை ஒழிக்க அனைவரும் ஒன்றுபட வேண்டும்.

இதேவேளை, பயங்கரவாதம் மற்றும் நிறவெறியை முடிவுக்குக் கொண்டு வருவதுடன் அமெரிக்காவின் அனைத்து மக்களும் அனைத்து வேற்றுமைகளையும் கடந்து ஒன்றுபடுவோம்.

ஒட்டுமொத்த அமெரிக்கர்களுக்கான ஜனாதிபதியாக நான் செயற்படுவேன். உலகமே அமெரிக்காவை உற்று நோக்கிக் கொண்டிருக்கிறது. அமெரிக்க வரலாற்றில் அடுத்த அத்தியாயத்தை எழுதுவோம்" என்றும் அவர் தெரிவித்தார். (நி-4)



உயர் நீதிமன்ற நீதிபதி சோனியா சோட்டோமேயர் முன்னிலையில் அமெரிக்காவின் முதல் பெண் துணை ஜனாதிபதியாக கமலா ஹாரிஸ் பதவியேற்றார்.

இதன் மூலம் தமிழகத்தை பூர்வீகமாக கொண்ட கமலா ஹாரிஸ் அமெரிக்க துணை ஜனாதிபதியாக பதவியேற்ற முதல் கறுப்பின மற்றும் முதல் ஆசிய அமெரிக்க பெண்ணாகிறார்.

## ட்ரம்பின் கொள்கைகளை முதல் நாளில் தலைகீழாக மாற்றிய ஜோ பிடன்

(வோஷிங்டன்)

அமெரிக்க ஜனாதிபதியாக பதவியேற்ற ஜோ பிடன், பதவியேற்ற முதல் நாளிலேயே முன்னாள் ஜனாதிபதி ட்ரம்பின் சில கொள்கை முடிவுகளை மாற்றியமைத்துள்ளார்.

அமெரிக்காவின் 46 ஆவது ஜனாதிபதியாக பதவியேற்றுள்ள ஜோ பிடன், வெள்ளை மாளிகையில் உள்ள ஓவல் அலுவலகத்தில் தனது பணிகளை தொடங்கினார்.

ஜனாதிபதியாக பதவியேற்ற முதல் நாளிலேயே, முன்னாள் ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் எடுத்த சில கொள்கை முடிவுகளை மாற்றியமைத்துள்ளார்.

கொரோனா நெருக்கடி, குடியேற்றம், இனவாத பிரச்சினை உள்ளிட்ட 15 முக்கிய உத்தரவுகளில் கையெழுத்திட்டுள்ளார் பிடன்.

கொரோனா நோய்த்தடுப்பு விடயத்தில் மத்திய அரசின் நடவடிக்கையை அதிகரிப்பது தொடர்பான உத்தரவில் முதலில் கையெழுத்திட்டார்.

அதன்பின்னர், அமெரிக்க-மெக்சிகோ எல்லைச் சுவர் கட்டுமானம் நிறுத்தம், அமெரிக்கா-கனடா இடையிலான எரிவாயு இணைப்பு திட்டமான, கீஸ்டோன் எக்ஸ்.எல். பைப் லைன் திட்டம் இரத்து உள்ளிட்ட உத்தரவுகளில் கையெழுத்திட்டார்.

பாரிஸ் பருவநிலை மாற்ற ஒப்பந்தத்தில் இருந்து அமெரிக்கா வெளியேறுவது தொடர்பான ட்ரம்ப் நிர்வாகத்தின் முந்தைய உத்தரவை மாற்றி, பருவநிலை மாற்ற ஒப்பந்தத்தில் அமெரிக்கா மீண்டும் இணையும் என ஜனாதிபதி ஜோ பிடன் அறிவித்திருந்தார். அதன்படி, பதவியேற்ற முதல் நாளிலேயே அதற்கான உத்தரவிலும் கையெழுத்திட்டுள்ளது குறிப்பிடத்தக்கது. (நி-4)

# உருமாறிய கொரோனாவின் தீவிர பரம்பல்

# இதுவரை 60 நாடுகளுக்கு பரவியது

## உலக சுகாதார அமைப்பு கவலை

(ஜெனிவா)

**இங்கிலாந்தில் உருவான உருமாறிய கொரோனா வைரஸ் தற்போது வேகமாகப் பரவிவரும் நிலையில் சுமார் 60 நாடுகளில் இதுவரை கண்டுபிடிக்கப் பட்டுள்ளது.**

குறித்த வைரஸ் கடந்த ஒரு வாரத்திற்கு முன்பை விட பத்து மடங்கு பரவியுள்ளதாக உலக சுகாதார அமைப்பு நேற்று முன்தினம் புதன்கிழமை வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ள தாவது,

இங்கிலாந்தில் உருமாறிய வைரஸ் கடந்த டிசெம்பர் நடுப்பகுதியில் முதன்முதலில் கண்டறியப்பட்ட நிலையில், முன்னைய கொரோனா வைரஸை விட 50 முதல் 70 வீதம் வரை அதிக வீரியத்தைக் கொண்டுள்ளது.

இதேவேளை, கொரோனா தொற்றினால் ஏற்பட்டுள்ள உலகளாவிய இறப்பு எண்ணிக்கை, தற்போது இரண்டு மில்லியனைக் கடந்துள்ள நிலையில், வைரஸின் புதிய வகைகள் ஆழ்ந்த கவலையை ஏற்படுத்தியுள்ளது.

இந்நிலையில், உலகெங்கிலும் உள்ள நாடுகள் தடுப்பூசிகள் பரவலாகக் கிடைக்கும் வரை நோய்த் தொற்றுகளை கட்டுப்படுத்துவதில் தீவிரம் காட்டி வருகின்றன.

இதனிடையே, தென்னாபிரிக்காவில் கண்டறியப்பட்டுள்ள உருமாறிய வைரஸ், பிரித்தானியாவைப் போலவே தீவிர பரவலைக் கொண்டுள்ள போதும் ஆபத்தானதாகத் தெரியவில்லை என உலக சுகாதார அமைப்பு குறிப்பிட்டுள்ளது. (நி-4)

# யாழ்ப்பாண விஞ்ஞான சங்க A பிரிவு வழங்கும்

## உலகையே ஆக்கிரமித்து வருகின்ற கொரோனா வைரஸ் ஓர் உயிரியல் யுத்தமா?

(தொடர்ச்சி)

இருந்த போதிலும் சிலருக்கு தீவிர கொவிட்-19 நோய்ப்பாதிப்பு ஏற்படும். இந் நிலையில் இந்நோய் பற்றி நாம் புரிந்து கொள்ள வேண்டிய விடயங்கள் மிகை யாகவே உள்ளன.

இவ் வைரஸ் தொற்று இலேசான நிலையிலுள்ள பெரும்பாலான மக்கள் கிட்டத்தட்ட இரண்டு வாரங்களில் மீள் நிலையை அடைகிறார்கள். உலகளா விய ரீதியில் லேசான தொற்றுக்குள் ளான நபர்களில் அரைவாசி எண் ணிக்கையானோர்கள் தமது சாதாரண நிலைக்கு மீண்டுள்ளதாக குறிப்பிடப் பட்டுள்ளது.

**தீவிர தொற்று (Serious Infection)**

வைரஸ் பாதிப்புக்கு எதிராக நோயெ திர்ப்பு சக்தி உக்கிரமாக செயற்படும் போது இது நோயாக உருவாகும். இந் நிலையில் உடற்பகுதிகளில் அழற்சி



ஏற்படும்போது உடல் முழுவதும் பாதிப் புக்களை ஏற்படுத்தலாம். கொரோனா வைரஸின் தொற்றானது தீவிர நிலை யில் உள்ள போது ஏற்படும் நுரையீரல் அழற்சியானது நிமோனியா என அழை க்கப்படுகின்றது. இதன்போது வைரஸ்க் கள் வாயிலிருந்து மூச்சுக் குழாய் வழியாக இரத்தத்திற்கு ஒட்சிசன் வாயு வினை வழங்குவதும் காபனீரொட் சைட் வாயு நீக்கப்படுவதுமான செயற்பா டுகள் நடைபெறுகின்ற பகுதியான சுவாசச் சிற்றறைகளைச் சென்றடை கின்றன. நிமோனியா (Pneumonia) ஏற்பட்ட நிலையில் சுவாச இடைவெளி குறைந்து சுவாசிப்பது சிரமமாவதுடன் இச்சந்தர்ப்பத்தில் சிலருக்கு சுவா சிப்பதற்கு செயற்கைச் சுவாசம் தேவைப் படும்.

**சிக்கலான நிலையில் பாதிப்பு**

இந்நிலையில்தான் உடல் செயற் பாட்டினை இழக்கின்றது. இதுவே மர ணம் ஏற்படவும் காரணமாக உள்ளது. இந்நிலையில் வைரஸ்க்கள் நோயெ திர்ப்பு சக்தியை மீறிச் செயற்பட்டு உடல் முழுவதும் பாதிப்பை ஏற்படுத்துவதுடன் நுரையீரலில் பரவலான அழற்சி ஏற் பட்டு மூச்சுத்திணறல் ஏற்படும் போது உயிர் வாழ்வதற்குத் தேவையான ஒட்சிசனை வழங்குவதை நுரையீரல் நிறுத்தி விடுகின்றது. இவ் ஒட்சிசன் குறைபாட்டால் மற்ற உள்ளுறுப்புக்க ளுக்குத் தேவையான ஒட்சிசன் கிடைக் காமல் போவதுடன் ஏற்கனவே நீரிழிவு, இரத்த அழுத்தம், இதய நோய்கள் மற்றும் உடல்நலப் பிரச்சினைகள் உள்ளவர்கள், வயதானவர்கள் அதிகம் பாதிக்கப்படுவதுடன் உள்ளுறுப்புக்கள் செயலிழப்பதன் மூலம் மரணம் வரை செல்கின்றது.

**கொரோனா வைரஸிற்கு சோதனை முறை இருக்கிறதா?**

ஆம், இவ் வைரஸ் நோய்நிலை மையைக் கண்டறிய பி.சி.ஆர். (PCR) எனும் துல்லியமான பரிசோதனை முறை உள்ளது. அம்முறையினைப் பயன்படுத்தி வைரஸ் தொற்றினை உறுதி செய்யலாம். இம்முறையானது சீனாவின் நோய்த்தடுப்பு மற்றும் நோய்க் கட்டுப்பாட்டு ஆராய்ச்சி மையங்களினால் வழங்கப்பட்ட வைரஸ்க்களின் பிறப் புரிமை தகவலை அடிப்படையாகக் கொண்டு விருத்தி செய்யப்பட்டது. நபர் ஒருவரில் கொவிட் - 19 வைரஸினு டைய தொற்று ஆரம்ப நிலையிலேயே உறுதி செய்யப்படுமிடத்து வழங்கப்படும் சிகிச்சையானது இவ் வைரஸினை இல்லாதொழிப்பதொன்றாக இருப்பதுடன்,

- அந்நோயாளிக்கு போதுமான ஒட் சிசன் கிடைக்கிறதா? என்பதை உறுதி செய்தல்.
- அடிக்கடி உடல் வெப்ப நிலையை பரிசோதித்தல் (காய்ச்சல்) மற்றும்
- தேவையேற்படும் சந்தர்ப்பத்தில் வெளிச்சுவாசமளிக்கும் முறையினை பயன்படுத்தல் (Ventilation) போன்ற செயற்பாடுகளை மேற்கொள்ள வேண் டும் எனவும் இவ் வைரஸின் தொற்று ஆரம்பத்திலேயே அடையாளம் காணப் பட்ட நோயாளிகள் படுக்கையில் ஓய்வெ டுத்தல் (Bed Rest), அதிகளவான திரவப் பானங்களை அருந்துதல் மற்றும் பரசிற்ற மோல் (Paracetamol) உள்ளெடுத்தல் என்பன மூலம் நிர்ப்பீடன தொகுதியா னது சரியான முறையில் தனது தொழி லைப் புரிய உதவுவதுடன், நோயினை இலகுவாக குணப்படுத்த இயலுமென வும் அமெரிக்காவின் தொற்று நோய் நிறுவனத்தின் பொதுச்சுகாதார அமைப்பி னுடைய தலைவி Dr.Julie Vaisham payan தெரிவித்துள்ளார்.

**கொரோனா வைரசுக்கான தடுப்பு மருந்து கண்டறிப்பட்டுள்ளதா?**

உலகளாவிய பிறப்புரிமையியல் மற்றும் மேம்பட்ட ஒருங்கிணைப்பானது புதிய தொழில்நுட்ப முன்னேற்றங் களைப் பயன்படுத்தி ஆராய்ச்சியாளர் களை விரைவாகச் செயற்பட அனு மதிக்கின்ற போதிலும் இவ்வைரஸ்க் கான தடுப்பூசிகண்டறியும் முறையானது ஒரு விலையுயர்ந்த மற்றும் ஆபத்தான செயல்முறையாகவே உள்ளது. கொரோனா வைரஸ்க்கான பூர்வாங்க மருத்துவ பரிசோதனைகளை குறிப்பிட்ட காலப்பகுதியில் செயற்படுத்த முடியு மெனவும் இவ்வைரஸ்க்கான தடுப்பூ சியானது பாதுகாப்பானதாகவும் வினைத் திறனாகவும் தொழிற்படுகின்றதா? என் பதை உறுதி செய்ய ஆய்வாளர்களால் இன்னும் விரிவான பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் எனவும் தேசிய தொற்றுநோய் மற்றும் ஒவ் வாமை நிறுவனத்தலைவர் Dr. Anthony S.Fauci கூறியுள்ளார்.

தற்போது ரெம்டிசிவிர் (Ramdesivir) என அழைக்கப்படும் வைரஸ் தடுப்பு மருந்து உட்பட பல எண்ணிக்கையான மருந்துகள் சாத்தியமான சிகிச்சை முறைகளாக சோதிக்கப்படுவதுடன். ரெம்டிசிவிர் மருந்து விலங்குகளில் வினைத்திறனாக தொழிற்படுவதாகவும் வோஷிங்டன் பகுதியிலுள்ள முதல் அமெரிக்க நோயாளிக்குச் சிகிச்சையளிப் பதற்காக பயன்படுத்தப்பட்டதாகவும் கூறப் படுகின்றது. அத்துடன் ஆசியாவின் வெவ்வேறு பகுதிகளிலுள்ள மருந்து தயாரிப்பாளர்கள் இக்கொரோனா வைர ஸ்க்கான மருந்தினை கண்டறிவதற் கான முயற்சிகளில் மும்முரமாக ஈடுபட்டு வருகின்றனர்.

கொரோனாவிற்கு எதிரான தடுப்பூசி 90% வெற்றியளித்துள்ளது என ஃபைசார் மருந்து நிறுவனம் அறிவித் துள்ளதுடன் மூன்றாம் கட்டச் சோத னையில் 90% வெற்றியளித்துள்ளதாக வும் அறிவிக்கப்பட்டுள்ளது. கொரோ னாவைத் தடுக்க தடுப்பூசி மட்டும் போதாது எனவும் மேலும் கொரோனா தொடர்பான சோதனைகள் தொடரப்பட வேண்டும் எனவும் அத்துடன் தனி மைப்படுத்தல் மற்றும் பாதுகாப்பு அவசி யம் எனவும் உலக சுகாதார நிறுவ னத்தலைவர் "டெட்டோரஸ்" கடந்த 2020 நவம்பர் 17 ஆம் திகதி குறிப்பிட் டுள்ளார். இருந்தபோதிலும் அண்மைய ஆய்வுகளின்படி இக்கொரோனா வைர ஸானது பாரிய அளவில் நுண்ணுயிர் கொல்லிக்கான எதிர்ப்பு சக்தியைக் கொண்டு வீரியமாக விருத்தியடைந்து வருவதாகவும் இந்நுண்ணுயிர்க் கொல் லிக்கான எதிர்ப்பு சக்தியானது கொரோனா வைரஸினுடைய பரவுகை போன்று ஆபத்தாக இருப்பதுடன், மருத் துவச் செயற்பாட்டுடன் கூடிய இந்நூற்றா ண்டிற்கு பாரியதொரு அச்சுறுத்தலாக இருந்து வருகின்றதெனவும் உலக சுகாதார ஸ்தாபனத்தினால் தெரிவிக் கப்பட்டுள்ளது.

**கொரோனா வைரஸில் இருந்து எம்மை எவ்வாறு பாதுகாத்துக் கொள்வது?**

கொவிட்-19 வைரஸ் தொற்றிலி ருந்து எங்களை நாம் பாதுகாத்துக் கொள்வதற்கு பின்வரும் வழிமுறை களைப் பின்பற்றுதல் அவசியமாகும்.

- 20 விநாடிகளுக்கு ஒரு முறை கைகளை நன்கு சவர்க்காரம் அல்லது சுத்திகரிப்பான்களை இட்டுக் கழுவுதல்.
- இருமல், தும்மலின் போதும் கைக்குட்டையைப் பயன்படுத்துதல்.
- அடிக்கடி முகத்தினை தொடு வதை தவிர்த்தல்.
- பொது இடங்களில் சமூக இடை வெளியைப் பேணுதல்.
- முகக்கவசம் அணிதல்.
- உங்களில் நோயறிகுறிகள் தென் பட்டால் அதனை உடனடியாக சுகாதா ரப்பணியாளர்களுக்குத் தெரியப்படுத்தி வீட்டிலேயே தனித்திருத்தல்.
- நோயெதிர்ப்பு சக்தியை அதிகரிக் கக்கூடிய சிறந்த வழிமுறைகளைப் பின்பற்றுதல்.
- போதுமான விற்றமின் - D பெறல்.
- தினமும் உடற்பயிற்சி செய்தல்.
- சீரான ஊட்டச்சத்துள்ள உணவை உள்ளெடுத்தல்.
- போதுமான தூக்கம்.

மேற்குறிப்பிடப்பட்ட தற்காப்பு நடவ டிக்கைகளை நாம் ஒவ்வொருவரும் தவறாது பின்பற்றுவோமானால் இவ் வைரஸினுடைய பரவலை நிச்சயமாக குறைக்க இயலுமென்பதுடன், நோய்த் தாக்கத்திற்கு உள்ளாகுபவர்களின் எண்ணிக்கையைக் குறைப்பதன் மூலம் எங்களால் இயன்றளவு சுகாதா ரத்துறைப்பணியாளர்கள், முப்படை யினர் மற்றும் காவல்படையினர் மீதான அழுத்தங்களைக் குறைத்து, நாமும் நலமானதொரு எதிர்காலத்தை கட்டியெழுப்ப வழிவகுக்கும்.

**" நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்"**

(முற்றும்)

## கொரோனா வைரஸிலிருந்து எப்படி தற்காத்து கொள்வது?




ஆக்கம் - ஏ.விதுஷா உதவி விரிவுரையாளர்,
விலங்கியல் துறை, விஞ்ஞான பீடம்,
யாழ்.பல்கலைக்கழகம்.

# உலக நாடுகளிலும் நீதிமன்றத் தீர்ப்புகள் வெளிப்படையாக விமர்சிக்கப்படுகின்றன

## ரஞ்சனுக்கு வழங்கப்பட்ட தீர்ப்பு கடுமையானது



(கொழும்பு)

வழக்கு தீர்ப்பொன்றை பாராளுமன்றத்துக்கு உள்ளேயும் வெளியேயும் விமர்சிக்க முடியும். உலக நாடுகளிலும் நீதிமன்ற தீர்ப்புகள் வெளிப்படையாக விமர்சிக்கப்படுகின்றன. அத்துடன் ரஞ்சனுக்கு வழங்கப்பட்டிருக்கும் தீர்ப்பு மிகவும் கடுமையானதாகும் என எதிர்க்கட்சி பிரதம கொறடா லக்ஷ்மன் கிரியெல்ல தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் புதன்கிழமை நடைபெற்ற சபை அமர்வின் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

தீர்ப்பு வழங்கிய நீதிபதிகளை விமர்சிக்க முடியாது. ரஞ்சன் ராமநாயக்கவுக்கு வழங்கப்பட்டிருக்கும் தீர்ப்பு, அவர் தெரிவித்த கருத்துக்கு சமாந்தரமான தீர்ப்பு அல்ல. மிகவும் கடுமையான தீர்ப்பு.

கடந்த 3 மாதங்களுக்கு முன்னர் இந்தியாவில் நீதிபதி ஒருவர் பிரதம நீதியரசரை மோசடிக்காரர் என தெரிவித்திருந்தார். அதற்காக அவருக்கு வழங்கப்பட்ட தீர்ப்பு ஒரு ரூபாய் தண்டமாகும். அதனையும் அவர் செலுத்த மறுத்துள்ளார். தற்போது அந்தத் தீர்ப்பு திகதி ஒத்திவைக்கப்பட்டிருக்கின்றது.

அதனால் இன்று நீதிமன்றங்களை விமர்சிப்பது பேச்சு சுதந்திரத்துக்கு சமமாகவே செல்கின்றது. ஆரம்ப காலங்களிலேயே நீதிமன்றங்களை விமர்சிப்பது மிகவும் பாரதூரமான குற்றமாக இருந்தது. தற்போது உலகில் அந்த நடைமுறை எங்கும் இல்லை. நீதிமன்றங்களினால் தவறான தீர்ப்பு வழங்கும்போது அதனை திருத்தியமைக்க ஜனாதிபதிக்கு முடியும். அன்று ஞானசார தேரருக்கு நீதிமன்றம் சிறைத்தண்டனை வழங்கியபோது மைத்திரிபால சிறிசேன அந்தத் தீர்ப்பின் கடுமையை உணர்ந்து அவருக்கு பொதுமன்னிப்பு வழங்கினார்.

அத்துடன் நீதிமன்றங்களில் இருப்பதும் எம்மைப்போன்ற மனிதர்கள். அவருக்கும் தவறு ஏற்படலாம். அதற்காகத்தான் மேன்முறையீடுகள் செய்யப்படுகின்றன. அதனால் ரஞ்சன் ராமநாயக்கவுக்கு வழங்கப்பட்ட தீர்ப்பு மிகவும் கடுமையானதாகும். அதாவது நாட்டில் இருக்கும் நீதிபதிகள் மற்றும் சட்டத்தரணிகளில் அதிகமானவர்கள் ஊழல்வாதிகள் என்றே ரஞ்சன் தெரிவித்தார்.

நீதிமன்ற தீர்ப்புகள் தொடர்பில் விமர்சிப்பதை சிலர் ஆதரிக்கின்றனர். சிலர் எதிர்க்கின்றனர். அதனை விளங்கிக்கொண்டு நாங்கள் செயற்பட வேண்டும் என லக்ஸ்மன் கிரியெல்ல மேலும் தெரிவித்தார். (நி-4)

# தாமரைக் கோபுரத்தினால் வருமானம் எதுவுமில்லை

(கொழும்பு)

சீனாவிடம் பெற்ற கடனுதவியுடன் நிர்மாணிக்கப்பட்ட தாமரைக் கோபுரம் இப்போதுவரை அது எந்த வருமானத்தையும் ஈட்டவில்லை என தொலைத்தொடர்பு ஒழுங்குமுறை ஆணையகத்தின் உயர் அதிகாரி ஒருவர் ஊடகம் ஒன்றுக்கு கருத்துத் தெரிவிக்கையில் இவ்வாறு தெரிவித்தார்.

தாமரைக் கோபுரத்தை நிர்மாணிக்க பெறப்பட்ட கடனுக்கான வட்டியாக ஆண்டுக்கு 560 மில்லியன் செலுத்த வேண்டும்.

அது தெற்காசியாவின் மிக உயரமான கோபுரமாகவும் உலகின் உயரமான கோபுரங்களின் பட்டியலில் பத்தொன்பதாவது இடமாகவும் உள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.



உள்ளூர் மற்றும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளை ஈர்க்கும் என்று எதிர்பார்க்கப்பட்டது. எனினும் கொரோனா பரவல் நிலைமை இதனை மேலும் மோசமாகியுள்ளது என அவர் மேலும் தெரிவித்தார். (நி-4)

# நாட்டின் வளங்களை நாங்கள் விற்கவில்லை

## ஐ.தே.க.

(கொழும்பு)

கொழும்பு துறைமுகத்தின் கிழக்கு முனையம் அல்லது துறைமுகத்தின் எந்தவொரு பகுதியையும் இந்தியாவிற்கோ ஜப்பானுக்கோ அல்லது வேறு நாடுகளுக்கோ விற்பதற்கு 2019 இல் எமது அரசாங்கம் எந்தவொரு ஒப்பந்தத்திலும் கையெழுத்திடவில்லை என ஐக்கிய தேசியக் கட்சி தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் நேற்று வியாழக்கிழமை வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. (நி-4)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2211

**திசா**




**சூரியா**




**பிரபா**




**அர்சனா**




**லக்சன்**




**கபில்**




நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# வீர வசனங்களை பேசிப் பேசியே நாட்டை நாசமாக்குகின்றனர்

## பொன்சேகா குற்றச்சாட்டு



(கொழும்பு)

எந்தவொரு சர்வதேச நாடும் எமது நாட்டில் சுயாதீனத்தில் தலையிட அனுமதிக்க முடியாது என அரசாங்கம் வீர வசனங்களைப் பேசிக் கொண்டு கொழும்பு துறைமுகத்தை வெளிநாட்டிற்கு கொடுத்து மண்டியிடும் நிலைமை உருவாகப்போகின்றது என எதிர்க்கட்சி உறுப்பினர் சரத் பொன்சேகா சபையில் குற்றம் சாட்டினார்.

மக்களை ஏமாற்றி ஆட்சிக்கு வந்தவர்கள் இன்று நாட்டினையும் நாசமாக்கிவருவதாகவும் அவர் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் புதன் கிழமை, அரசாங்கத்தின் வர்த்தமானி அறிவித்தல்களை நடைமுறைப் படுத்தாமை குறித்த தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க கொண்டு வந்த சபை ஒத்திவைப்பு பிரேரணையில் உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அரசாங்கம் நாளுக்கு நாள் வர்த்தமானி அறிவித்தல்களை விடுத்தாலும் மக்கள் நாளுக்கு நாள் பட்டினியை எதிர் கொண்டு வருகின்றனர். கடந்த காலத்தில் எமது ஆட்சியில் அத்தியாவசிய பொருட்களின் விலை குறித்து மேடைகளில் பேசினர்.

ஆனால் இன்று நாட்டில் விலைவாசி எப்படி உள்ளது என்பது மக்கள் நன்கு அறிந்திருப்பார்கள். கற்பனைக் கதைகளை கூறி மக்களை ஏமாற்றி ஆட்சிக்கு வந்தவர்கள் இன்று எவ்வாறு மக்களை நடத்துகின்றனர் என்பதை சிந்தித்து பார்க்க வேண்டும்.

தோட்டத் தொழிலாளர்களுக்கு 1000 ரூபாய் பெற்றுக்கொடுப்பதாகக் கூறினர். அதுவும் நடைபெறவில்லை. கிழக்கு முனையத்தை விற்க மாட்டோம் என்று கூறி ஆட்சிக்கு வந்தவர்களின் வாக்குறுதி அனைத்தும் இன்று பொய்யாகிவிட்டது.

வெளிநாடுகளுக்கு எமது நாட்டில் தலையிட அனுமதிக்க முடியாது, நாட்டின் சுயாதீனம், உரிமையை 'பாதுகாப்போம் என வீர வசனம் பேசியது அரசாங்கம். ஆனால் இந்த துறைமுகத்தை வெளிநாட்டிற்கு கொடுத்து மண்டியிடும் நிலைமை உருவாகும், மக்கள் இதனை விளங்கிக்கொள்ள வேண்டும் என அவர் எச்சரிக்கை விடுத்தார். (நி-4)

# மேல் மாகாணப் பாடசாலைகள் அனைத்தும் அடுத்த மாதம் திறக்கப்படும்- கல்வி அமைச்சு

(கொழும்பு)

எதிர்வரும் பெப்ரவரி மாதம் 15ஆம் திகதி முதல் மேல் மாகாணத்திலுள்ள பாடசாலைகளை ஆரம்பிப்பதற்கு எதிர்பார்த்துள்ளதாக கல்வி அமைச்சின் செயலாளர் பேராசிரியர் கபில பெரேரா தெரிவித்துள்ளார்.



மேல் மாகாணத்திலுள்ள பாடசாலைகளை மீள ஆரம்பிப்பது குறித்து கல்வி அமைச்சில் நேற்று முன்தினம் இடம்பெற்ற விசேட கலந்துரையாடலின்போது அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

அதன்படி, சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்தின் பரிந்துரைகளுக்கு அமைய இந்த தீர்மானம் எட்டப்பட்டுள்ளதாகவும் அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

இம்முறை கல்வி பொதுத் தராதர சாதாரண தரப்பரீட்சைக்கு தோற்றவுள்ள மாணவர்களுக்காக எதிர்வரும் 25 ஆம் திகதி முதல் மேல் மாகாணத்திலுள்ள 907 பாடசாலைகளின் கற்றல் செயற்பாடுகளை ஆரம்பிப்பதற்கு தீர்மானிக்கப் பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார். (நி-4)

# விமான நிலையங்கள் மீளத் திறப்பு முதல் விமானம் நாட்டை வந்தடைந்தது

(கொழும்பு)

இலங்கையில் சுமார் 10 மாதங்களுக்குப் பின்னர் விமான நிலையங்கள் நேற்று வியாழக் கிழமை திறக்கப்பட்டுள்ள நிலையில், முதல் விமானம் ஓமானில் இருந்து வந்துள்ளது.

ஓமானில் இருந்து குறித்த வணிக விமானம் நேற்றுக் காலை 7.40 மணியளவில் கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தை வந்தடைந்தது.

இந்த விமானத்தின் மூலம் சுமார் 50 இலங்கையர்கள் நாடு திரும்பியுள்ளனர் என்பதுடன், அவர்கள் இராணுவத்தினரால் தனிமைப்படுத்தல் நிலையங்களுக்கும் அழைத்துச் செல்லப்பட்டுள்ளனர் என தெரிவிக்கப்படுகிறது.

மேலும் வணிக விமானங்கள் மீண்டும் தொடங்கப்பட்டுள்ளமையினால் பயணிகள் மீண்டும் சாதாரண விமான கட்டணத்தைப் பெற முடியும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

முன்னதாக, கொரோனா அச்சம் காரணமாக விமான நிலையங்கள் மூடப்பட்ட கால கட்டத்தில் சிறப்பு விமானங்கள் மட்டுமே செயற்பட்டு வந்தன. அவற்றில் விமானக் கட்டணங்கள் மிக அதிகமாக இருந்தமையும் குறிப்பிடத்தக்கது. (நி-4)

# இன்று ஒரு தகவல்

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

## இல்லாத ஒன்று!

இருட்டு நேரம்.ஒருத்தன் ஓடிப்போய் விளக்கைக் கொளுத்திக் கொண்டு வந்தான்.என்ன செய்கின்றாய்? என்று கேட்டார் ஒருத்தர்.இருட்டை விரட்டிக் கொண்டிருக்கின்றேன் என்றான் அவன். இல்லாத ஒன்றை எப்படி விரட்ட முடியும்? என்றார் அவர்.

இவனுக்கு ஒன்றும் புரியவில்லை. என்ன சொல்கின்றீர்கள்.. இருட்டு என்பது இல்லாத ஒன்றா? என்று கேட்டான். இப்பொழுது அவர் விளக்கம் கொடுத்தார்.

இருட்டு என்று ஒன்று தனியாக இல்லை. வெளிச்சம் இல்லாத நிலை தான் அது... ஒரு இடத்தில் வெளிச்சமாக இருந்தால் வெளிச்சமாக இருக்கு என்கின்றோம். அந்த இடத்திலே வெளிச்சம் இல்லை என்றால் இருட்டு என்கின்றோம்.

ஆக..அந்த இடத்தில் இருப்பதும் இல்லாமல் போவதும் வெளிச்சம் தான். இருட்டு என்று ஒன்று தனியாக ஓடிவந்து உட்கார்ந்து கொள்வது இல்லை.

நாம் தான் விளையாட்டுத் தனமாக நினைக்கின்றோம்.. இருட்டு என்று ஒன்று ஏற்கனவே இருப்பதாகவும் வெளிச்சத்தைக் கண்டவுடனே அது எழுந்திருச்சு ஓடிப் போவதாகவும் என்று நினைத்துக் கொள்கின்றோம். இதிலே இருட்டை விரட்டுகிறேன் என்று வீர வசனம் வேறு. வெளிச்சம் இல்லாமை தான் இருட்டு என்பதை நாம் நன்றாகப் புரிந்து கொள்ள வேண்டும்.

எங்கள் மனதுக்குள்ளே பயம் என்று சொல்கின்றோம். பாருங்க. அது கூட இருட்டு மாதிரித்தானாம் ஞானிகள் சொல்கின்றார்கள். வெளிச்சம் இல்லாமல் இருட்டு என்கின்றோம் அல்லவா.. அது மாதிரி அன்பு இல்லாமை தான் பயம் என்கின்றார்கள் அவர்கள்.

அன்பு இல்லாத ஒரு நிலை தான் பயம். அன்பு என்பது விளக்கை அங்கே ஏற்றி வைத்துவிட்டால்... பயம் என்கின்ற இருட்டு அங்கே இருக்காது.

சூஃபி இலக்கியத்திலே ஒரு சம்பவம் வரும். முல்லா நஸ்ருதீனுக்கு காலையில் கல்யாணம்.

அன்றைக்கு மாலையிலே அவரும் அவருடைய இளம் மனைவியும் உறவினர்களுடன் ஆற்றைக் கடந்து போய்க் கொண்டிருக்கின்றார்கள்.

திடீர் என்று புயல்... வெள்ளம்..படகு இப்படியும் அப்படியும் ஆட ஆரம்பித்து விட்டது. எல்லோருக்கும் பயம்..முல்லா மட்டும் பயமில்லாமல் அவர் பாட்டுக்கு இருந்தார்.ஏங்க உங்களுக்கு பயமாக இல்லையா? என்று கேட்டார் அவர் மனைவி மிகவும் ஆச்சரியமாக.

இதற்கு முல்லா நஸ்ருதீன் பதில் சொல்லவில்லை.. இடுப்பிலே இருந்த ஒரு கத்தியை எடுத்தார்.மனைவியின் கழுத்திற்கு நேராக நீட்டினார் குத்தப் போவது போல் ஓங்கினார். அந்த அம்மா முகத்தில் எந்தவிதச் சலனமுமில்லை.

இப்பொழுது முல்லா கேட்டார் கத்தி என்றால் உனக்குப் பயமா இல்லையா? என்றார்.இதற்கு அவர்கள்...கத்தி என்றால் அபாயகரமானதாக இருக்கலாம். ஆனால் அதைப் பிடித்திருக்கின்றவர் என்னில் அளவு கடந்த அன்பு வைத்திருக்கின்ற என் கணவர்.. அதனால் நான் பயப்படவில்லை என்றார். இப்பொழுது முல்லா சொன்னார்.அதே மாதிரி தான் எனக்கும்.. இந்த அலைகள் என்றால் ஆபத்தானதாக இருக்கலாம். ஆனால் இதை ஆட்டுவித்துக் கொண்டிருக்கின்ற அல்லாஹ் அன்புமயமானவர். அதனால் எனக்குப் பயம் இல்லை என்றார்.அவருக்கு நம்பிக்கை இருந்தது. அதனால் அன்பு இருந்தது. நம்பிக்கை இல்லை என்றால் அன்பும் இருந்திருக்காது. அன்பு இல்லை என்றால் பயம் வந்திருக்கும். படகிலே இருந்த ஏனையவர்கள் மாதிரி அவரும் பயந்து நடுங்கிக் கொண்டிருந்திருப்பார். இந்த உண்மையை எங்கள் வாழ்க்கையிலேயும் பொருத்திப் பார்க்க வேண்டும்.

நமக்குப் பயம் ஏற்படுகின்றது என்றால் என்ன அர்த்தம்? எங்கள் மேலேயே நமக்கு நம்பிக்கையில்லை என்று அர்த்தம். நான் கடவுளுக்குப் பயந்தவன் என்று சொல்கின்றார்கள் பாருங்கள். அது மிகவும் அபத்தமானது என்கின்றார்கள் பெரியவர்கள் எல்லாம். (சுவாமி சுக போதானந்தா). அங்கே செலுத்த வேண்டியது அன்பே தவிர பயம் இல்லை. எங்கள் உபநிஷத்துக்கள் சொல்கின்ற மிகப் பெரிய விடயமே பயம் இல்லாமல் இரு என்பது தான் என்கின்றார் சுவாமி விவேகானந்தர்.

பயப்படுகின்றவர்களுக்கெல்லாம் பெரியவர்கள் சொல்கின்ற அறிவுரை என்ன தெரியுமா?எதிர் காலத்தைப் பற்றித் திட்டமிடுங்கள். தவறில்லை.. ஆனால் எதிர் காலத்தில் என்ன நடக்கும் என்கின்ற கற்பனைகளில் பயந்து கொண்டிருந்தீர்கள் என்றால் உங்கள் மகிழ்ச்சி தான் பாழாகும்.

ஒருத்தர் டாக்டரிடம் வந்தார்.டாக்டர் பதினைந்து வருடத்திற்கு முன்னால் ஒரு தடவை உங்களிடம் வைத்தியத்திற்கு வந்தேன்.. காலிலே அடிபட்டு வந்தேன்.. காலிலே கட்டுப் போட்டு தண்ணி படாமல் பார்த்துக் கொள்ளவும் என்றார். அதனால் இப்பொழுது என்ன? என்றார் இவர். இனிமேல் நான் குளிக்கலாமா? என்று கேட்பதற்காக வந்தேன் டாக்டர் என்றார் அவர்.

# உள்ளூராட்சிமன்ற உறுப்பினர்கள் தெரிவு முறையும் தேர்தல் நடைமுறைகளும் (2017 வரை)

04



கலாநிதி க.தவலிங்கம்
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.

தேர்தல் முறைமையின் வடிவம் தேர்தல் சட்டங்களின் வேறு பரப்புகளையும் பாதிக்கின்றது: அதாவது தேர்தல் முறைமையின் தெரிவானது, மாவட்ட/சபை எல்லைகள் வரையப்படும் முறையில், தேர்தல் தொகுதி/ வட்டார எல்லைகளை வகுப்பதற்கான நடைமுறைகளில், வாக்காளர் எவ்வாறு பதிவு செய்யப்படுகின்றனர் என்பதில், வாக்குச்சீட்டுகளின் வடிவத்தில், வாக்குகள் எவ்வாறு எண்ணப்படுகின்றன என்பதில் மற்றும் தேர்தல் செயல்முறையின் வேறு அநேக அம்சங்களில் மாறுதல் உண்டு பண்ணுகின்றது.

ஒவ்வொரு வாக்காளரும் அதே வாக்கை அதேமுறையில் வாக்களித்தும் ஒவ்வொரு கட்சிக்கும் ஒரே எண்ணிக்கையிலான வாக்குகள் கிடைத்தும் இருந்தாலும் கூட, தெரிவு செய்த முறைமையைப் பொறுத்துத் தேர்தல் முடிவுகள் பெரிதும் வேறுபடக் கூடும்: ஒரு முறைமை, கூட்டரசாங்கம் ஒன்றுக்கு அல்லது சிறுபான்மை அரசாங்கமொன்றுக்கு வழிவகுக்கக்கூடிய அதேவேளையில் வேறொரு முறைமை, தனியொரு கட்சி பெரும்பான்மைக் கட்டுப்பாட்டைப் பெறுவதற்கு இடமளிக்கக் கூடும்.

**தேர்தல் முறைமை என்பது தேர்தலொன்றில் அளிக்கப்பட்ட வாக்குகளை ஆசனங்களாக மாற்றுவதாகும். இது பயன்படுத்திய தேர்தல் சூத்திரம், வாக்குச் சீட்டின் அமைப்பு, உள்ளூராட்சி சபைக்கு எத்தனை பிரதிநிதிகளைத் தெரிவு செய்யப்படுகிறார்கள், வாக்காளர் பதிவு, வேட்பாளர்களின் தகைமை, வாக்குகள் எவ்வாறு எண்ணப்படுகின்றன போன்ற பல காரணிகளில் தங்கியுள்ளது. ஒவ்வொரு வாக்காளரும் அதேவாக்கை அதே முறையில் வாக்களித்தும் ஒவ்வொரு கட்சிக்கும் ஒரே எண்ணிக்கையிலான வாக்குகள் கிடைத்தும் இருந்தாலும்கூட, தெரிவு செய்த முறைமை யைப் பொறுத்துத் தேர்தல் முடிவுகள் பெரிதும் வேறுபடக் கூடும்.**

இதற்கு உதாரணமாக 1970ம் ஆண்டு இலங்கையில் நடந்த பொதுத் தேர்தலைக் கூறலாம். அத்தேர்தலில் வாக்குகளின் கணக்குகளை பொறுத்தவரை அளிக்கப்பட்ட மொத்த வாக்குகள் 4,949,616 ஆகும். இதில் 2/3 பெரும்பன்மைக்கு மேல் (116) ஆனங்களை பெற்ற ஐக்கிய தேசிய முன்னணி மொத்தமாக பெற்ற வாக்குகள் 2,415,302ஆகும். இது மொத்த வாக்கின் 48.7 வீதமாகும். தொகுதி முறைத் தேர்தலில் 50 விகிதத்திற்கும் குறைவான வாக்குகளை பெற்று 76.8 வீதத்திற்கு மேல் ஆசனாங்கள் பெறப்பட்ட நிகழ்வை தேர்தல் காட்டுகின்றது. இது எவ்வளவு நீதி அற்றதும் ஜனநாயக விரோதமானதும் என்பது கவனிக்கப்பட வேண்டும். அதேநேரம் வெறும் 17 ஆசனங்களை மட்டும் பெற்ற ஐக்கிய தேசியக் கட்சி 1,876,956 வாக்குகளை பெற்றிருந்தது. இது மொத்த வாக்குகளில் 37.91 வீதமாகும் என்பதும் குறிப்பிடத்தக்கது. அதே நேரம் 91 ஆசனங்களை பெற்ற ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி தனியாக பெற்ற வாக்குகள் 1,839,979. இது 36.86 வீதமாகும். அதாவது 91 ஆசனங்களைப் பெற்ற சுதந்திரக் கட்சியை விட 17 ஆசனங்களை பெற்ற ஐக்கிய தேசியக் கட்சி கூடுதலான வாக்குகளைப் பெற்றிருந்தது.

இதேபோல் 1977ஆம் ஆண்டு தேர்தலில் 50.92 வீத வாக்குகளைப் பெற்ற ஐக்கிய தேசியக் கட்சிக்கு 141 ஆசனங்களும் (83.33 வீதம்) 29.72 வீத வாக்குகளைப் பெற்ற சுதந்திரக் கட்சிக்கு 8 ஆசனங்களும் (4.78 வீதம்) கிடைத்தன. இதுதான் தொகுதி முறைத் தேர்தலில் உள்ள குறைபாடாகும்.

### தேர்தல் முறைமைகளும் கட்சி முறைமைகளும்

சில முறைமைகள் அரசியல் கட்சிகள் உருவாக்கப்படுதலை ஊக்குவிக்கின்றன அல்லது கட்டாயப்படுத்தவும் செய்கின்றன, ஏனையவை தனிப்பட்ட வேட்பாளர்களை மட்டும் அங்கீகரிக்கின்றன. விருத்தியடைகின்ற கட்சி முறைமையின் வகையில், குறிப்பாக சட்டசபையில் அரசியல் கட்சிகளின் எண்ணிக்கை மற்றும் சார்பளவில் அவற்றின் பருமன் மீது தேர்தல் முறைமை கடும் மாறுதல் உண்டு பண்ணுகின்றது. அவ்வாறே கட்சிகளின் உள்ளக ஒட்டிணைவின் மீதும் ஒழுங்காற்றல் மீதும் சில முறைமைகள் ஒரு கட்சியின் வெவ்வேறு பிரிவுகள் ஒன்றுக்கொன்று எப்போதும் முரண்பட்டுக் கொண்டிருக்கின்ற உட்கட்சி வேறுபாட்டை ஊக்குவிக்கின்ற அதே வேளையில் மற்றொரு முறைமை கட்சிகள் ஒரே குரலில் பேசுவதை ஊக்குவிக்கவும் கருத்து வேறுபாட்டை அடக்கவும் கூடும். கட்சிகள் பிரசாரம் செய்கின்ற முறையிலும் கட்சியின் உயர் குடியினர் நடந்து கொள்ளும் முறை யிலும் கூடத் தேர்தல் முறைமைகள் மாற்றத்தை ஏற்படுத்துவதன் மூலம் பரந்தகன்ற அரசியல் சூழ்நிலையைத் தீர்மானிப்பதற்கு உதவுகின்றன, அவை கட்சிகளுக்கிடையில் நட்புக் கூட்டுகள் உருவாகுதலை ஊக்குவிக்க அல்லது மந்தப்படுத்தக் கூடும்.

மேலும் அவை கட்சிகளும் குழுக்களும் அகல்விரிவான தளத்தைக் கொண்டனவாகவும் ஒத்துப்போகின்றனவாகவும் இருப்பதற்கான அல்லது குறுகிய இனத்துவ அல்லது உறவுசார்ந்த பிணைப்புகளுக்கான கவர்ச்சியை அடிப்படையாகக் கொண்டனவாக இருப்பதற்கான தூண்டுதல்களை வழங்கக்கூடும்.

ஒரு புதிய நிறுவன ரீதியான சட்டத்துக்காக அல்லது தேர்தல் சட்டத்துக்காகப் பேசுபவர்கள் தேர்தல்களில் புகுதலை இலகுவானதாக்கக் கூடியதாக அது இயன்றளவு உட்படுத்தியதாக இருக்க வேண்டுமென விரும்பக்கூடும்.

எதிர்நிலையாக, ஆளுமை மற்றும் இனத்துவ அரசியலினால் தூண்டப்பட்ட கட்சி முறைமையின் கூறுபடுநிலை பற்றி அடிக்கடி கவலை தெரிவிக்கப்படுவதனால், மேற்கூறப்பட்டதற்காகப் பேசுபவர்களும் அதனை வடிவமைப்பவர்களும் பிரதிநிதித்துவத்துக்கான கீழ் எல்லை (சட்ட சபையில் பிரதிநிதித்துவம் பெறுவதற்கு ஒரு கட்சிக்குத் தேவையான ஆகக்குறைந்த ஆதரவு மட்டம்) உயர்ந்ததாக அமைக்கப்பட வேண்டுமென விரும்பக் கூடும். எனினும் கட்சிகள் பல்கிப் பெருகின்றமை ஆட்சியாதிக்கத்திலிருந்து வெளிப்படுகின்ற நர்டுகளில் தேர்தல்களின் ஓர் அம்சமாயுள்ளது. இங்கு வெற்றியுறாத கட்சிகள் தாமாகவே மறைந்து போகின்றன.

இயன்றவரை தேர்தல் முறைமை, எல்லாக் கட்சிகளுக்கும் வேட்பாளர்களுக்கும் தேர்தல் ரீதியாக நடுநிலையான முறையில் செயற்படவேணடும். அது ஏதேனும் அரசியல் குழுவுக்கெதிராகப் பகிரங்கமாகப் பாகுபாடு காட்டக்கூடாது. ஜனநாயகமொன்றில் தேர்தல் அரசியலென்பது சரிசமநிலையற்ற ஓர் ஆட்டக்களமென்ற உணர்வு அரசியல் ஒழுங்கு வலுவற்றதென்பதற்கும் உறுதிப்பாடின்மை விரைவில் ஏற்படக்கூடுமென்பதற்கும் ஓர் அறிகுறியாகும்.

**இயன்றவரை தேர்தல் முறைமை, எல்லாக் கட்சிகளுக்கும் வேட்பாளர்களுக்கும் தேர்தல் ரீதியாக நடுநிலையான முறையில் செயற்பட வேண்டும். அது ஏதேனும் அரசியல் குழுவுக்கெதிராகப் பகிரங்கமாகப் பாகுபாடு காட்டக்கூடாது. இதனாலேயே சிறு பான்மையினர் மாகாண சபைத் தேர்தலுக்கு கலப்புத் தேர்தல் முறைமை ஒத்துவராது என்கிறார்கள்.**

தேர்தல் முறைமை பற்றிய விவரங்கள் இப்போது வழக்கமான சட்டங்களில் காணப்படுவதனால் அவை சட்ட சபையில் சாதாரண பெரும்பான்மை மூலம் மாற்றப்படலாம். இது பொதுமக்களின் அபிப்பிராயத்திலும் அரசியல் தேவைகளிலும் ஏற்படும் மாற்றங்களுக்கு முறைமையைக் கூடிய இசைவுடைய தாக்குகின்ற அனுகூலத்தைக் கொண்டிருக்கக் கூடும். ஆனால் சட்ட சபையிலுள்ள பெரும்பான்மைகள் தமக்கு அரசியல் அனுகூலம் பெறும்பொருட்டு ஒரு தலைப்பட்சமாக முறைமைகளை மாற்றுகின்ற ஆபத்தையும் இது கொண்டுள்ளது.

தேர்தல் முறைமைகளில் எண்ணிறந்த நுணுக்க விபர வேறுபாடுகள் உள்ளன. எனினும் அவற்றை 12 பிரதான முறைமைகளாகப் பிரிக்கலாம். இம்முறைமைகளில் பெரும்பாலானவை மூன்று பரந்த குடும்பங்களினுள் அடங்குகின்றன - பன்மை/பெரும்பான்மை முறைமைகள், விகிதாசார முறைமைகள் மற்றும் கலப்பு முறைமைகள் ஆகும்.

**தேர்தல் முறைமைகளில் எண்ணிறந்த நுணுக்க விபர வேறுபாடுகள் உள்ளன. எனினும் அவற்றை 12 பிரதான முறைமைகளாகப் பிரிக்கலாம். இம் முறைமைகளில் பெரும்பாலானவை மூன்று பரந்த குடும்பங்களினுள் அடங்குகின்றன. அவை பெரும்பான்மை முறைமைகள், விகிதாசார முறைமைகள் மற்றும் கலப்பு முறைமைகள் ஆகும். இலங்கையில் இம் மூன்று முறைமைகளும் உள்ளூராட்சிச் சபைத் தேர்தல்களில் பரீட்சிக்கப்பட்டுவிட்டன.**

இலங்கையில் இம் மூன்று முறைமைகளும் உள்ளூராட்சிச் சபைத் தேர்தல்களில் பரீட்சிக்கப்பட்டுவிட்டன. 1946 முதல் 1978 வரை பெரும்பான்மை முறைமையிலும் 1979 முதல் 2017 வரையிலும் விகிதாசார முறைமையிலும் 2018 ஆம் ஆண்டு உள்ளூராட்சிச் சபைத் தேர்தல்கள் கலப்பு முறைமைகளின் கீழும் நடைபெற்றன.

(தொடரும்...)

# கடன் வழங்கல் திட்டம் மத்திய வங்கி தீர்மானம்

(கொழும்பு)

நாட்டின் பொருளாதாரத்திற்கு ஆதரவளிக்கும் நோக்கில் நுண்பாக, சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில் முயற்சிகளுக்கான கடன் வழங்கல் திட்டங்களை அறிமுகப்படுத்துவதற்கு இலங்கை மத்திய வங்கி தீர்மானித்திருக்கிறது.

மத்திய வங்கியின் நாணயச் சபைக் கூட்டத்திலேயே மேற்படி தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

அதன்படி, மத்திய வங்கி அதன் துணைநில் வைப்பு வசதி வீதத்தினையும் துணைநில் கடன் வழங்கல் வசதி வீதத்தினையும் முறையே 4.5 சதவீதமாகவும் 5.5 சதவீதமாகவும் அவற்றின் தற்போதைய மட்டங்களிலேயே பேணுவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

பேரண்டப் பொருளாதார நிலைமைகள் மற்றும் உள்நாட்டு, உலகளாவிய ரீதியில் ஏற்பட்ட அபிவிருத்திகளைக் கருத்திற்கொண்டே இந்தத் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

நாணயச்சபை கடந்த 2020 ஆம் ஆண்டில் ஒட்டுமொத்த சந்தைக் கடன் வழங்கல் வீதங்களின் குறைப்பினைக் கருத்திற்கொண்டு, பொருளாதார வளர்ச்சிக்கு கடன் வழங்கல் வீதங்களில் தொடர்ச்சியான கீழ்நோக்கிய திருத்தமொன்று அவசியமென்று பரிந்துரை செய்தது.

2020 நவம்பரில் அறிவிக்கப்பட்டவாறு, வங்கித்தொழில் சமூகத்தின் ஆலோசனையுடன் பொருளாதாரத்திற்கு ஆதரவளிக்கும் நோக்கில் நுண்பாக, சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில் முயற்சிகளுக்கான கடன் வழங்கல் திட்டங்களை அறிமுகப்படுத்துவதற்கும் நாணயச்சபை தீர்மானித்துள்ளது. (நி-4)

# ஆலய வழிபாடு ஏன்–எதற்கு – எப்படி



## தவ பலன்களைத் தரும் தேரோட்ட தரிசனம்

**கோ**விலில் கருவறையில் மூலவரை நன்கு அலங்காரம் செய்து சிறப்பான நைவேத்தியம் படைத்து நறுமணப் பொருட்களால் தீப - தூப ஆராதனைகள் நடத்தப்படும்போது நாம் நம்மையே மறந்து இறைவனை வழிபடுவோம். கருவறை சூழல் நம்மை இறைவனிடம் நெருக்கத்தை ஏற்படுத்தும்.

இந்தப் புண்ணியமும் பாக்கியமும் எல்லோருக்கும் கிடைத்து விடுவதில்லை. நிறையப் பேர் பல்வேறு காரணங்களால் அடிக்கடி ஆலயத்துக்குச் செல்வதில்லை.

சிலர் நோய்வாய்ப்பட்டு இருப்பார்கள். சிலர் முதுமை காரணமாக வீட்டில் முடங்கிக் கிடப்பார்கள். இப்படிப்பட்டவர்களும் தன்னை வழிபட வேண்டும், தனது அருள் பார்வை அவர்கள் மீது பட வேண்டும் என்பதற்காகத்தான் இறைவன் உற்சவராக தேரில் அமர்ந்து வீதிகளில் உலா வருகிறார்.

உற்சவர் விக்கிரகங்கள் 99 சதவீதம் உலோகத்தால் உருவாக்கப்பட்டிருக்கும். இந்த விக்கிரகங்கள் கருவறை மூலவரிடம் உள்ள அதிர்வலைகளை உள்வாங்கிக் கொள்ளும் சக்தி படைத்தவை.

எனவே இந்தச் சக்தியுடன் வீதி உலா வரும் உற்சவர்கள் கருவறை மூலவர் தரும் அத்தனை பலன்களையும் பக்தர்களுக்கு அள்ளிக் கொடுப்பார் என்பது குறிப்பிடத்தக்கது.

எனவே தேரோட்டம் நடைபெறும் போது தவிர்க்காமல் தரிசனம் செய்யுங்கள்.

கடுமையாகத் தவம் செய்பவர்கள் மீது கடவுள் இரக்கப்பட்டு விரும்பி வேண்டி கேட்கும் வரத்தை எல்லாம் எப்படிக் கொடுத்து விடுவாரோ அதுபோல தேரோட்டத்தைக் கண்டு வழிபட்டால் தவம் இருப்பவர்கள் பெறுவதற்கு சமமான பலன்களைப் பெறலாம்.

பண்டைக் காலத்தில் தேரோட்டம் 15 நாள், 20 நாள் வரை கூட நடக்குமாம். எனவே இதைத் தேர்த் திருவிழா என்றனர். தேருக்கு இரதம் என்றும் ஒரு பொருள் உண்டு. இதை அடிப்படையாகக் கொண்டு "ரதோத் சவம்" என்றும் சொல்கிறார்கள். சவம் என்றால் "வெளி வருதல்" என்று பொருள். (குழந்தை பிறப்பை பிரசவம் என்பார்கள்) கடவுள் ரதத்தில் வெளியில் வருவதால் ரதோத் சவம் என்கிறார்கள்.

ரதத்தைச் செலுத்த சாரதி தேவை. ஜீவாத்மாவாகிய நம்மைச் சாரதியாக இருந்து ப்ரமாத்மா வழிநடத்துகிறார் என்பதைத் தேரோட்டம் உணர்த்துகிறது. மூலவர் இருக்கும் ஆலயம் நகராது.

ஆனால் உற்சவர் இருக்கும் தேர் நகரக் கூடியது. எனவே தேரை "நகரும் கோவில்" என்று ஆகமங்களில் குறிப்பிட்டுள்ளனர்.

கிராமங்களில் தேரோட்டம் நடைபெறும்போது முக்கிய இடங்களில் நிறுத்தி உற்சவருக்குத் தீபாராதனை காட்டுவார்கள்.

அப்போது அந்தப் பகுதியில் உள்ளவர்கள் வந்து தேங்காய் உடைத்து அர்ச்சனை செய்து வழிபடுவார்கள். இது ஒவ்வொரு தெருவிலும் வசிக்கும் மக்களுக்கு மிகுந்த மனநிறைவைக் கொடுக்கும்.

அது மட்டுமின்றி சாமியே நம் வீட்டுக்கு வந்துவிட்டு செல்கிறது என்று மக்கள் மனம் குதூகலம் அடையும். இந்த மகிழ்ச்சி தேரோட்ட நாளில் மட்டுமே கிடைக்கும்.

இத்தகைய சிறப்புடைய தேரோட்டம் நடப்பது சங்க காலத்தில் இருந்தே நடந்து வருகிறது. அந்தக் காலத்தில் அரசர்கள் தங்களது போர்ப்படைகளாகத் தேர்ப்படை, யானைப்படை, குதிரைப் படை, காலாட்படை என 4 விதமான படைகளை வைத்திருந்தனர். (தொடரும்)

# செய்தித்துளிகள்


## சுகாதார விதிமுறைகளை மீறியோர் கைது

(கொழும்பு)

முகக் கவசம் அணியத் தவறிய மற்றும் சமூக இடைவெளியை பின்பற்றத் தவறியமைக்காக மேல் மாகாணத்திற்கு வெளியே 18 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இது தவிர சுகாதார வழிகாட்டல் விதிமுறைகள் கடைப்பிடிக்கப்படுகிறதா? என்பதை அறிய மேல் மாகாணத்தில் 910 தனியார் மற்றும் அரசு நிறுவனங்கள் நேற்று ஆய்வு செய்யப்பட்டதாகவும் அவர் கூறினார். சுகாதார வழிகாட்டுதல்களை பின்பற்றத் தவறிய நிறுவனங்களின் நிர்வாகத்திற்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்பட உள்ளதாகவும் பிரதிப் பொலிஸ்மா அதிபர் தெரிவித்தார். (நி-4)

## வெள்ளவத்தை சந்தையில் பணிபுரிந்த 12 பேருக்குக் கொரோனாத் தொற்று



(கொழும்பு)

வெள்ளவத்தை சந்தையில் பணியாற்றிய 12 பேருக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. இதனையடுத்து குறித்த சந்தை தற்காலிகமாக மூடப்பட்டுள்ளதாக வெள்ளவத்தை சுகாதார மருந்துவ அதிகாரி தெரிவித்துள்ளார்.

சில தினங்களாக வெள்ளவத்தைப் பகுதியில் கொரோனாத் தொற்றாளர்களின் எண்ணிக்கை சடுதியாக அதிகரித்து வருகின்றது. நேற்று முன்தினம் மாத்திரம் வெள்ளவத்தை பகுதியில் 23 பேருக்குத் தொற்று உறுதி செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (நி-4)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 300 | 260 | 250 |
| உருளைக்கிழங்கு | 100 | 120 | 120 |
| பச்சைமிளகாய் | 600 | 550 | 700 |
| தக்காளி | 130 | 160 | 140 |
| மரவள்ளிக்கிழங்கு | 50 | 70 | 50 |
| கோவா | 80 | 80 | 100 |
| கரட் | 140 | 200 | 200 |
| பூசணி | 160 | 140 | 200 |
| புடோல் | 180 | 180 | 160 |
| வாழைக்காய் | 60 | 60 | 100 |
| சின்ன வெங்காயம் | 450 | 400 | 450 |
| பெரிய வெங்காயம் | 80 | 80 | 80 |
| பாகற்காய் | 300 | 250 | 400 |
| வெண்டிக்காய் | 180 | 120 | 200 |
| கருணைக் கிழங்கு | 120 | 120 | 120 |
| பயற்றங்காய் | 300 | 350 | 300 |
| லீக்ஸ் | 100 | 120 | 100 |
| பீற்றூட் | 200 | 160 | 240 |
| கறிமிளகாய் | 350 | 300 | 400 |
| முருங்கைக்காய் | — | — | — |
| போஞ்சி | 220 | 260 | 250 |
| கத்தரிதம்புள்ள | 280 | — | 220 |
| கீரை - 1 பிடி | 80 | 60 | 80 |
| தேசிக்காய் | 100 | 160 | 200 |
| தேங்காய் (ஒன்று) | 90 | 70 | 70-90 |
| இராசவள்ளி | 200 | 200 | 200 |
| வெங்காயப்பூ | 350 | 300 | 350 |
| முள்ளங்கி | 80 | 120 | 120 |
| பொன்னாங்காணி | 40 | 50 | 40 |
| வல்லாரை | 15 | 20 | 30 |
| ஈரப்பலா | 80 | — | 80 |




# கிளி கொடுத்த பழம்



குஞ்சுலபாதம் என்ற நாட்டை வசீகரன் என்ற மன்னன் ஆண்டு வந்தான். அவர்களுக்கு குழந்தை கிடையாது. அதனால் அவர்கள் ஒரு பச்சைக்கிளியை வளர்த்து வந்தனர். அக்கிளி மிகவும் அழகானது.

ஒரு நாள் ஒரு முனிவர் தவம்செய்யும்போது அவர் அருகில் வந்து உட்கார்ந்திருந்தது.

"ஏய் கிளியே! நீ மிகவும் அழகாய் இருக்கிறாய், உனக்கு நான் ஒரு பழம் தருகிறேன். அதை சாப்பிட்டால் என்றும் இளமையுடன் இருப்பாய்," என்று கூறி பழத்தை கொடுத்தார். கிளி அப்பழத்தை வாங்கி வந்து தான் சாப்பிடாமல் அரசனிடம் கொடுத்தது.

அரசன் அப்பழத்தை சாப்பிடாமல் தன் தோட்டத்தில் நட்டு வைத்தால் அம்மரம் பெரிதானவுடன் அதில் வரும் பழத்தை நம் மக்கள் சாப்பிடலாம் என்றெண்ணி அப்பழத்தை நட்டு வைத்தான் அரசன்.

அம்மரத்திற்கு காவலாளி ஒருவன் இருந்தான். ஒரு நாள் அம்மரம் பெரிதாகி பழம் பழுத்தது. "ஒரு நாள் இந்த பழத்தை பறித்து தன் அரசனுக்கு மறுநாள் கொடுக்கலாம்," என்று நினைத்தான்.

அன்று மாலை ஒரு நல்ல பாம்பு அம்மரத்தில் ஏறி ஒரு பழத்தில் தன் விஷத்தை கக்கியது. அது காவலாளிக்கு தெரியாது. மறுநாள் அந்த காவலன் தன் அரசனுக்கு பழத்தை பறித்துக் கொடுத்தான்.

அப்பழம் பாம்பு விஷத்தை கக்கிய பழம் என்று தெரியாமல் கொடுத்தான். அரசன் அப்பழத்தை வாங்கி கொண்டு, "நீ ஒரு வருடமாக கஷ்டப்பட்டு வளர்த்தவன். அதனால் இந்தப் பழத்தை நீ சாப்பிடு!" என்று கூறினான்.

காவலன் பழத்தைச் சாப்பிட்ட உடனே இறந்துவிட்டான். அதை கண்ட அரசன் அதிர்ச்சியடைந்தான்.

இதற்கு காரணமான கிளியை அடித்துக் கொன்றான். அந்த மரத்தின் பழத்தை யாரும் சாப்பிடக் கூடாது என கட்டளையிட்டான்.

ஒருநாள் வயதான நோயினால் தள்ளாடிய கிழவன் ஒருவன், தன் பிள்ளைகள் தன்னை பார்க்கவில்லையே என்ற வேதனையில் நாம் இருந்து என்ன பயன் என்று நினைத்தான்.

எனவே, இந்த விஷப் பழத்தை சாப்பிட்டு செத்துடலாம் என நினைத்து அந்த மரத்தில் ஏறி அங்கிருந்த பழத்தை பறித்து சாப்பிட்டான். அவ்ளோதான் அவனது வயோதிகத் தோற்றம் மாறி அழகிய இளைஞனானான். இந்தச் செய்தி அரசனின் காதுக்குச் சென்றது.

ஆச்சரியமடைந்த அரசன் அப்பழத்தை தின்றான். அவனும் நோய் நீங்கி இளைஞனானான். அவசரப்பட்டு கிளியை கொன்றதை எண்ணி வருந்தினான்.


# மகா அலெக்சாண்டரின் வரலாறு

## கௌகமேலா நாயகன்

வீரர்கள் எல்லோரும் இரண்டு அணிகளாகப் பிரிந்து கொள்வார்கள். பிரிவுக்கு ஒரு தளபதி. ஒரு தளபதிக்கு அலெக்சாண்டர் என்ற பெயர் வழங்கப்படும்.

எந்த நாட்டை எதிர்த்துப் போர் நடைபெற இருக்கிறதோ அந்த மன்னனின் பெயர் இன்னொரு பிரிவின் தளபதிக்கு வைக்கப்படும்.

இருதரப்பு வீரர்களும் மன்னர் அலெக்சாண்டர் முன்னிலையில் போரிட்டுக் கொள்வார்கள். ஆயுதங்கள் எதையும் பெரிதாகப் பயன்படுத்தமாட்டார்கள்.




சின்னச் சின்னக் கற்கள், கொம்புகள் இவை தான் ஆயுதங்கள். போட்டிகள் மும்முரமாக நடக்கும். இறுதியில் வெற்றி பெறுபவர்களுக்கு மன்னரே பரிசுகள் வழங்கிக் கௌரவிப்பார்.

அலெக்சாண்டர் காலத்தில் மட்டுமல்ல மன்னர் பிலிப்பின் காலத்திலும் இதுபோன்ற பொய் யுத்தங்கள் நடந்தன. இவற்றில் எல்லாம் அலெக்சாண்டர் என்று பெயரிடப்பட்ட தளபதிக்கே இறுதி வெற்றி கிடைக்கும்.

எவ்வளவு பலமில்லாத அணியாக இருந்தாலும்கூட தான் தோற்றால் எதிர்வரும் நிஜ யுத்தத்தில் மன்னர் அலெக்சாண்டருக்குத் தோல்வி வருமோ? என்று பயப்படுவார்கள். அந்தப் பயமே அவர்களுக்குள் சக்தியைத் திரட்டித்தரும். வெற்றி பெற்று விடுவார்கள்.

கி.மு. 331 இல் நடந்த கௌகமேலா யுத்தத்திற்கு முன்னர் இது போன்ற பொய்யான யுத்தம் ஒன்று நடந்தது. அதில் அலெக்சாண்டர் என்ற தளபதிதான் வெற்றியை ருசித்தான். அலெக்சாண்டர் மகிழ்ச்சியில் திளைத்தார். ஜெயித்த தளபதிக்கு நிறையப் பரிசுகளை வாரி வழங்கினார்.

இந்த யுத்தத்தை அர்பெலா யுத்தம் (Battle of Arbela) என்றும் சிலர் சொல்வார்கள். இந்த முறையும் டேரியஸின் படைகள் எண்ணிக்கையில் அதிகம்.

மௌண்ட்காமல் (Mount Carmel- ஈராக்கின் வடபகுதியே இந்த ஒட்டகமலை) என்கிற இடத்தில் நடைபெற்ற இந்த யுத்தத்தில் அலெக்சாண்டரின் படைகளைக் காட்டிலும் டேரியஸின் படைகளே எண்ணிக்கையில் உயர்ந்திருந்தன.

(தொடரும்)

முரணில்லாதிருக்க முயற்சி செய். உண்மையாயிருக்க மட்டுமே உழைத்திடு.

~ ஹோம்ஸ்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## தனிக்குடித்தனம் போகின்ற எங்கள் மாகாணப் பாடசாலைகள்

ஆரம்பத்தில் சமஷ்டி. இடையில் சுயாட்சி. அடுத்து தனித் தமிழீழம். இப்போது வடக்கு – கிழக்கு இணைந்த பிராந்தியம்.

இவ்வாறாக இராகங்களை மாற்றி மாற்றி நாம் பல்லவி இசைக்கின்றோம்.

எதுவும் உறுதியில்லை. உடன்பாடான முடிவு இல்லை. ஒற்றுமையில்லை. அவர் வெள்ளை என்றால் நான் கறுப்பு என்று சொல்ல வேண்டும். அதுவே என் அரசியலைத் தக்க வைக்கும் என்றளவில் எங்கள் நிலைமையுள்ளது.

உண்மை, தமிழ் அரசியல்வாதிகளில் யாரை நம்புவது என்பதுதான் இப்போது தமிழ் மக்களுக்கு இருக்கின்ற மிகப்பெரிய பிரச்சினை.

இது ஒருபுறமிருக்க, மாகாண சபைகளுக்கான அதிகாரம் மிகக் குறைவு. இந்த நிலையில் மாகாண சபைக் கட்டமைப்பால் எங்ஙனம் தமிழ் மக்களின் உரிமையை நிலைநாட்ட முடியும் என்று கர்ச்சிக்கின்றோம்.

இவ்வாறு மாகாண சபைக்கு அதிகாரம் வேண்டும் என்று ஒருபுறத்தில் உரக்கக் கோசமிடும் நாங்கள், மறுபுறத்தில் மாகாண நிர்வாகத்துக்குட்பட்ட; பிரபலமான பாடசாலைகளைத் தேசிய பாடசாலைகளாக மாற்றும் முயற்சியில் அதிதீவிரமாக ஈடுபட்டுள்ளோம்.

இது விடயத்தில் தமிழ்ப் பாராளுமன்ற உறுப்பினர்களின் சிபார்சுக் கடிதங்களும் இணைக்கப்படுகின்றன.

கல்வி அமைச்சருடன் இரகசியச் சந்திப்புகள் நடத்தப்படுகின்றன.

ஆளுந்தரப்பில் அங்கம் பெறக்கூடிய தமிழ்ப் பாராளுமன்ற உறுப்பினர்களின் உதவியோடு ஐயா! எங்கள் மாகாணப் பாடசாலையை தேசிய பாடசாலையாக மாற்றுங்கள் என்று கோரிக்கை விடப்படுகிறது.

எப்படி இருக்கிறது எங்கள் நிலைமை என்பதை ஒரு கணம் சிந்தித்துப் பாருங்கள்.

எங்களிடம் உள்ள, பிரபலமான மாகாணப் பாடசாலைகளைத் தேசியப் பாடசாலைகளாக்கி அதனை மத்திய அரசாங்கத்திடம் தாரை வார்த்துக் கொடுத்துவிட்டு, மாகாண சபைக்கு அதிகாரம் வேண்டும் என்று கேட்கின்ற திருகுதாளத்தை எம்மைத் தவிர வேறு யாரால் செய்ய முடியும்.

இப்போதுகூட யாழ்ப்பாணத்தில் பத்து பாடசாலைகள் தேசிய பாடசாலைகளாக மாற்றப்படுகின்றன.

அதாவது வடக்கு மாகாணக் கல்வி நிர்வாகத்தினின்றும் விலகி, தேசிய பாடசாலை என்ற பெயரோடு மாகாணப் பாடசாலைகள் தனிக் குடித்தனம் போகின்றன.

இனி அவர்களின் நிர்வாகக் கட்டமைப்பு மத்திய கல்வி அமைச்சுக்கு பாரப்படுத்தப்படுகிறது.

இருந்தும் இதனைக் கண்டிப்பதற்கும் கடுமையாக எதிர்ப்பதற்கும் எங்களிடம் யார் உளர்.

ஏதோ! நடப்பதைக் கண்டு கொள்வோம்.

## இளம் குடும்பஸ்தர் அல்வாயில் திடீர் மரணம்

### உடற்கூற்று பகுப்பாய்வு கொழும்புக்கு அனுப்பி வைப்பு

(கரணவாய்)

அல்வாயில் உயிரிழந்த குடும்பஸ்தர் ஒருவரின் இறப்புக்கான காரணம் கண்டறியப்படாத நிலையில் அவரின் உடற்கூற்றுக்கள் பகுப்பாய்வுக்காக கொழும்புக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

அல்வாய் கிழக்கு கயிலந்தோட்டத்தை சேர்ந்த கிருஷ்ணன் பிரதீபன் (வயது- 38) என்பவர் நேற்று முன்தினம் புதன்கிழமை இரவு முச்சக்கரவண்டி ஒன்றில் வீதியால் பயணித்துக் கொண்டிருந்தபோது முச்சக்கர வண்டி தடம்புரண்டுள்ளது.

வீதியில் கிடந்த அவரை விசேட தேவைக்குட்பட்ட நபர் ஒருவர் அழைத்துச் சென்று வீட்டில் விட்டதாக விசாரணயில் தெரிவிக்கப்பட்டது.

இந்நிலையில் நள்ளிரவு அவரின் உடலில் ஏற்பட்ட மாற்றத்தையடுத்து அவரை பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் அனுமதித்தபோது அவர் உயிரிழந்துவிட்டதாக தெரிவிக்கப்பட்டது.

நேற்று வியாழக்கிழமை பருத்தித்துறை ஆதார வைத்தியசாலைக்கு சென்ற பருத்தித்துறை மரண விசாரணை அதிகாரி சதானந்தன் சிவராசா விசாரணைகளை மேற்கொண்டதுடன் பிரேத பரிசோதனைக்கு உத்தரவிட்டார்.

பிரேத பரிசோதனையில் இறப்புக்கான காரணம் கண்டறியப்படாத நிலையில் அவரின் உடற்கூற்றுக்கள் பகுப்பாய்வுக்காக கொழும்புக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

(ம-3,60)

## மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின்விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை 23 ஆம் திகதி சனிக்கிழமை காலை 8 மணியிலிருந்து பிற்பகல் 5 மணி வரை

**யாழ். பிரதேசத்தில்** மல்லாகம் ஒரு பகுதி, அளவெட்டி, பன்னாலை, மல்லாகம் நீதிமன்றக் கட்டடத் தொகுதி, தூதாவளை பிரதேசம், மந்திகை, உபயகதிர்காமம், முள்ளி, வல்லிபுரம், வல்லிபுரம் நீர்ப்பாசன மற்றும் வடிகால் அமைப்பு சபை ஆகிய இடங்களிலும்

**வவுனியா பிரதேசத்தில்** புளிதறித்த புளியங்குளம், செக்கட்டிப்புலவு, மதவுவைத்தகுளம், தவசிக்குளம், தோணிக்கல், பண்டாரிக்குளம், குளோப் அரிசி ஆலை, கோவில்குளம் 10வது ஒழுங்கையிலிருந்து சிதம்பரபுரம் வரை, வீரபுரம். ஆகிய பிரதேசங்களிலும் மின்சாரம் தடைப்படும்.

## ஸ்ரீஸ்ரீ ரவிசங்கர் சுவாமியின் சிந்தனையில் இருந்து

### இரு நிகழ்ச்சிகள்

எங்கு அன்பு இருக்கிறதோ அங்கு அச்சம் இல்லை. ஆண்டவனால் தண்டிக்கப்படுவதைப் பற்றி பயப்பட வேண்டாம். அவன் உங்கள் மீது வைத்திருக்கும் அன்பின் மேல் நம்பிக்கையோடு இருங்கள்.

தங்கள் திருமண நாளைக் கொண்டாடும் தம்பதியர் குருஜிக்கு அழகான வேலைப்பாடுகளுள்ள விசிறி ஒன்றைக் காணிக்கையாகத் தந்துவிட்டு "இரு நன்றியுள்ள விசிறிகளிடமிருந்து ஒரு விசிறி" என்று சொன்னார்க்ள்.

**குருஜி:** பக்தர்கள் விசிறிகள், பகவான் காற்று,காற்று எப்போதும் உண்டு. எனினும் விசிறிகள் தான் காற்றை நமக்கு உணர்த்துகின்றன. பகவான் எப்போதும் இருக்கிறார். எனினும் பக்தர்கள் தான் அவர் இருப்பதை உணர்த்துகிறார்கள். (முற்றும்)

## கொரோனாவால் மரணமானவர் வவுனியா பூந்தோட்டத்தில் தகனம் செய்யப்பட்டார்

(வவுனியா)

மன்னார் பொது வைத்தியசாலை தனிமைப்படுத்தல் விடுதியில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் கோவிட் -19 நோயால் உயிரிழந்தவரின் சடலம் வவுனியா பூந்தோட்டத்தில் அமைந்துள்ள நகர சபையால் பராமரிக்கப்பட்டுவரும் மின் மயானத்தில் நேற்று தகனம் செய்யப்பட்டது.

இருதய நோயாளியான அவர் மன்னார் பொது வைத்தியசாலை தனிமைப்படுத்தல் விடுதியில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் உயிரிழந்தார்.

மன்னார் உப்புக்குளத்தைச் சேர்ந்த 61 வயதுடைய இஸ்லாமியர் ஒருவரே இவ்வாறு உயிரிழந்தார்.

இந்நிலையில் பொலிஸார் மற்றும் சுகாதார அதிகாரிகளின் பிரசன்னத்துடன் நேற்று பிற்பகல் 12 மணியளவில் அவரது உடல் வவுனியாவில் எரியூட்டப்பட்டது.(ம-3,299)

## இரத்ததான முகாம்

(குப்பிழான்)

அராலி தெற்கு சைவத் தமிழ் இளைஞர் மன்றத்தினர் நடத்தும் இரத்ததான முகாம் நிகழ்வு நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணி முதல் கரைப்பிட்டிப் பிள்ளையார் கோவிலடியில் அமைந்துள்ள அராலி தெற்கு கிராம அபிவிருத்திச் சங்க மண்டபத்தில் இடம் பெறவுள்ளது.

குறித்த இரத்ததான முகாமில்குருதிக்கொடையாளர்கள் அனைவரும் கலந்து கொண்டு உயிர்காக்கும் உன்னத பணிக்கு ஒத்துழைப்பு வழங்குமாறு ஏற்பாட்டாளர்கள் அழைப்பு விடுக்கின்றனர். (5-18)

## இந்து சமய தத்துவங்கள் ஐந்நூறு

எப்போதும் எந்த இடத்திலும் பிறர் மனம் நோகப் பேசக்கூடாது. ஒருவரிடம் நேரில் பேசும் பொழுது " நீங்கள் உங்கள் என்று பன்மையாகப்பேசிவிட்டு அவர்கள் இல்லாத போது இவன், அவன்" என்று ஒருமையில் பேசுவது மனிதனுடைய உயர்வைக் கெடுத்துவிடும். (தொடரும்)

## அறிந்துகொள்ள வேண்டிய ஆன்மீகத் தகவல்கள்

### ஐயப்ப பக்தர்கள் கடைப்பிடிக்க வேண்டிய முக்கிய விதிகள்

❖ யாத்திரை புறப்படுவதற்கு சில நாட்களுக்கு முன் "கன்னி பூஜை" நடத்த வேண்டும். சற்றே விரிவான முறையில் பஜனை, கூட்டு வழிபாடுகள் ஆகியவைகள் நடத்தி ஐயப்ப பக்தர்களுக்கும், மற்றவர்களுக்கும் பிரசாதம் அளித்து அன்னதானம் செய்ய வேண்டும்.

❖ முதன் முறையாக யாத்திரையை மேற்கொள்ளும் ஐயப்பன்மாரைக் "கன்னி ஐயப்பன்" என்றும் அதன் பிறகு மலையாத்திரை செய்யும் ஐயப்பன்மார்களை "பழமக்காரர்கள்" என்றும் அழைக்கப்படுவார்கள்.

❖ இருமுடி கட்டு பூஜையை தன் வீட்டிலோ, குருசாமி வீட்டிலோ கோயில்களிலோ வைத்து நடத்த வேண்டும். வீட்டை விட்டு கிளம்பும் முன்பு விடலைக்காய் ஒன்றை வீட்டின் முன் அடித்துவிட்டு "சுவாமியே சரணம் ஐயப்பா" என்று சரணம் விளித்து புறப்பட வேண்டும்.

❖ கன்னி ஐயப்பன்மார்கள் யாத்திரை புறப்பட்ட திகதியிலிருந்து ஐயப்பன் சன்னிதானம் செல்லும் வரை அவர்களாக இருமுடியை தலையிலிருந்து இறக்கி வைக்கவோ, ஏற்றி வைக்கவோ கூடாது. குருநாதர் அல்லது பழமலை ஐயப்பன்மார்களைக் கொண்டுதான் ஏற்றவோ, இறக்கவோ வேண்டும்.

❖ யாத்திரை வழியில் அடர்ந்த வனங்களில் காட்டு யானை, புலி, கரடி முதலான விலங்குகள் இருக்குமாதலால் பக்தர்கள் கூட்டமாக சரணம் விளித்துக் கொண்டே செல்ல வேண்டும்.

(தொடரும்)

# தை மாத இராசி பலன்கள்

## 14.01.2021 - 12.02.2021

## ஆன்மிகப் பற்று அதிகரிக்கும்



துலாம் இராசி வாசகர்களே!

சார்வரி வருடம் தை மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, மாதத் தொடக்கத்தில் உங்கள் இராசிநாதன் சுக்கிரன் சகாய ஸ்தானத்தில் இருக்கிறார். 'தைரியகாரகன்' செவ்வாய் சப்தம ஸ்தானத்தில் இருந்து உங்கள் இராசியைப் பார்க்கிறார். எனவே, தைரியமும் தன்னம்பிக்கையும் அதிகரிக்கும். துணிந்து சில முடிவுகளை எடுத்து தொல்லைகளை போக்கிக் கொள்ள முன்வருவீர்கள். இரண்டில் கேது இருப்பதால் வாக்குறுதி கொடுக்கும் முன் யோசிப்பது நல்லது. ஆன்மிகப் பற்று அதிகரிக்கும்.

**எட்டில் ராகு, இரண்டில் கேது**

இம்மாதம் அஷ்டமத்தில் ராகு சஞ்சரிக்கிறார். மறைந்த ராகுவால் நிறைந்த தன இலாபம் உண்டு. எனினும் தொழிலில் ஏற்ற இறக்க நிலையே காணப்படும். பழைய சேமிப்புகள் கரையலாம். செல்லப்பிராணிகளை வளர்ப்பவர்கள் எச்சரிக்கையாக இருங்கள். இரண்டில் கேது இருப்பதால் குடும்பத்தில் சிறுசிறு பிரச்சினைகள் வந்து போகும். உறவினர்கள் உதவி செய்வதாக சொல்லிவிட்டு கடைசி நேரத்தில் கையை விரிக்கலாம். சர்ப்ப சாந்தி வழிபாடுகளை மேற்கொள்ளுங்கள்.

**கூட்டுக்கிரக யோகம்**

மாதத் தொடக்க நாளில் நான்காமிடத்தில் சூரியன், சந்திரன், குரு, புதன், சனி ஆகிய ஐந்து கிரகங்கள் இணைந்து சஞ்சரிக்கின்றன. இதனால் ஓரளவு நன்மைகள் நடைபெறும். லாப ஸ்தானாதிபதியான சூரியன், நான்காமிடத்தில் சஞ்சரிப்பதால் வருமானம் திருப்தியாகும். தெய்வீகப் பற்று அதிகரிக்கும். அதே நேரத்தில் அர்த்தாஷ்டம குரு மற்றும் அர்த்தாஷ்டமச் சனியின் ஆதிக்கம் இருப்பதால் ஆரோக்கியத்திற்காக செலவிட நேரிடும். சொத்துக்களை விற்க முன் வருவீர்கள். உத்தியோகத்தர்களுக்கு கேட்ட இடத்திற்கு மாறுதல்கள் உண்டு. சகப் பணியாளர்களால் சில முட்டுக் கட்டைகள் ஏற்படலாம்.

**மகர - புதன் வக்கிரம்**

ஜனவரி 21 ஆம் திகதி முதல் பெப்ரவரி 10 ஆம் திகதி வரை மகரத்தில் சஞ்சரிக்கும் புதன் வக்கிரம் பெறுகிறார். உங்கள் இராசிக்கு 9, 12 ஆகிய இடங்களுக்கு அதிபதியான புதன் வக்கிரம் பெறும் பொழுது, தந்தை வழியில் அனுகூலங்கள் ஏற்படலாம். பாகப்பிரிவினை தாமதமாகும். பயணங்கள் அதிகரிக்கும். கட்டிய வீட்டை பழுது பார்ப்பதற்காக கணிசமான




தொகையை செலவிட நேரிடும். வியாபாரப் போட்டி அதிகரிக்கும்.

**மகர குருவின் சஞ்சாரம்**

தற்சமயம் மகரத்தில் சஞ்சரிக்கும் குரு பகவான் நீச்சம் பெற்றிருந்தாலும், சனி பகவானோடு இணைந்து நீச்ச பங்க இராஜயோகம் அடைகிறார். அவரது பார்வை உங்களது இராசிக்கு 8, 10, 12 ஆகிய இடங்களில் பதிகிறது. எனவே இழப்புகளை ஈடு செய்ய புதிய வாய்ப்புகள்வரலாம். மேலும் ஜனவரி22 ஆம் திகதி சூரியனோடு இணைவதனால் குரு பகவான் சற்று வலிமை இழக்கிறார். எனவே நீண்ட நாள் பாக்கிகள் வசூலாகலாம்.

**மகர - சுக்கிரன் சஞ்சாரம்**

ஜனவரி 29 ஆம் திகதி, மகர இராசிக்கு சுக்கிரன் செல்கிறார். தன வரவு திருப்தி தரும். நண்பர்களால் சில சிக்கல்கள் தீரும். கடமையில் இருந்த தொய்வு அகலும். வீடு கட்டி குடியேறும் எண்ணம் பூர்த்தியாகும். திட்டமிட்ட காரியங்களை திறம்பட செய்து முடிப்பீர்கள். ஆபரணங்கள் வாங்கும் யோகம் உண்டு. இம்மாதம் வெள்ளிக்கிழமை தோறும் இலட்சுமியை வழிபடுங்கள்.

**பெண்களுக்கான பலன்கள்**

இம்மாதம் எதிலும் அதிக விழிப்புணர்ச்சி தேவை. கொடுத்த வாக்கைக் காப்பாற்ற பெரும் முயற்சி எடுக்கும் சூழ்நிலை உருவாகும். கணவன்-மனைவிக்குள் ஒற்றுமை பலப்பட, ஒருவரை ஒருவர் புரிந்து கொண்டு செயற்படுங்கள். பிள்ளைகளின் எதிர்கால நலன் கருதி உங்கள் சேமிப்பில் சிறிது கரையலாம். சுபகாரிய பேச்சுக்கள் முடிவாகும். பணிபுரியும் பெண்கள், மேலதிகாரிகளின்பாராட்டைப்பெறுவீர்கள். நினைத்த இடத்திற்கு மாறுதலும் கிடைக்கும்.

ஜோதிடக் கலாமணி
சிவல்புரி சிங்காரம்

## நினைத்ததை நினைத்த நேரத்தில் செய்து முடிப்பீர்கள்



விருச்சிக இராசி வாசகர்களே!

சார்வரி வருடம் தை மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, மாதத் தொடக்கத்தில் உங்கள் இராசிநாதன் செவ்வாய் சொந்த வீட்டில் பலம்பெற்று சஞ்சரிக்கிறார். தன - பஞ்சமாதிபதியான குரு பகவான் நீச்சம் பெற்றாலும் சனியோடு இணைந்து 'நீச்சபங்க இராஜயோக'த்தை உருவாக்குகிறார். எனவே, பண வரவு திருப்தி தரும். தொழில் முன்னேற்றம் அதிகரிக்கும். நல்ல வாய்ப்புகள் இல்லம் தேடி வரும். உங்களுக்கு ஏழரைச் சனி விலகி விட்டதால், தொட்டது துலங்கும். நினைத்ததை நினைத்த நேரத்தில் செய்து முடிப்பீர்கள்.

**ஜென்ம கேதுவின் சஞ்சாரம்**

இம்மாதம் ஜென்ம இராசியில் கேது சஞ்சரிக்கிறார். ஆன்மிக நாட்டம் அதிகரிக்கும். பணிகளை திட்டமிட்டபடி செய்து முடிப்பீர்கள். துணிவும் தன்னம்பிக்கையும் அதிகரிக்கும். தொழில் போட்டிகளை சமாளிப்பீர்கள். பயணங்கள் பலன் தரும். சப்தம ஸ்தானத்தில் ராகு இருப்பதால், குடும்பத்தில் கருத்து வேறுபாடுகள் ஏற்படாமல் பார்த்துக் கொள்ளுங்கள். கோபத்தை குறைத்துக் கொள்வது நல்லது.

**கூட்டுக்கிரக சேர்க்கை**

உங்களுக்கு மூன்றாமிடமான வெற்றிகள் ஸ்தானத்தில் குரு, சனி, சூரியன், சந்திரன், புதன் ஆகிய 5 கிரகங்கள் இணைந்திருக்கின்றன. இதன் பலனாக இல்லம் கட்டி குடியேறும் ஆசை நிறைவேறும். சகோதரர்களின் கடமைகளை முடித்துக் கொடுப்பீர்கள். தொழில் ஸ்தானாதிபதி சூரியன், சகாய ஸ்தானத்தில் குருவோடு இணைந்திருப்பதால், எதிர்பார்த்த காரியங்கள் எளிதில் நடைபெறும். தொழில் வளர்ச்சியில் முன்னேற்றம் பிறக்கும்.

**மகர - புதன் வக்கிரம்**

ஜனவரி 21 ஆம் திகதி முதல் பெப்ரவரி 10 ஆம் திகதி வரை மகர இராசியில் புதன் வக்கிரம் பெறுகிறார். உங்கள் இராசிக்கு அஷ்டம இலாபாதிபதியான புதன் வக்கிரம் பெறுவதால், மற்றவர்களை நம்பி பொறுப்புகளை ஒப்படைக்க வேண்டாம்.

சந்தர்ப்பங்களை சாதகமாக்கிக் கொள்ளுங்கள். தொழிலில் எதிர்பார்த்த இலாபம் கிடைக்கும். உடன்பிறப்புகளின் வாயிலாக செலவு வந்துசேரும். இடம், பூமி வாங்குவது பற்றி சிந்திப்பீர்




கள். புதனின் வக்கிர நிவர்த்திக்குப் பிறகு, பொது வாழ்வில் இருப்பவர்களுக்கு புதிய பொறுப்புகள் கிடைக்கும்.

**மகர - குரு சஞ்சாரம்**

தற்சமயம் மகரத்தில் சஞ்சரிக்கும் குரு பகவான் நீச்சம் பெற்றிருந்தாலும் சனி பகவானோடு இணைந்து 'நீச்சபங்க இராஜயோகம்' அடைகிறார். எனவே கல்யாண முயற்சிகள் கைகூடும். பொன், பொருள் சேர்க்கை உண்டு. ஜனவரி 22 ஆம் திகதி, குரு வலிமை இழப்பதால் விரயங்கள் அதிகரிக்கும். வீட்டிற்குத் தேவையான பொருட்களை வாங்கும் முயற்சியில் ஈடுபடலாம்.

**மகர - சுக்கிரன் சஞ்சாரம்**

ஜனவரி 29 ஆம் திகதி, மகர இராசிக்கு சுக்கிரன் செல்கிறார். சப்தம விரயாதிபதி மூன்றில் சஞ்சரிக்கும் பொழுது பயணங்களால் பலன் கிடைக்கும். பாகப்பிரிவினை சுமுகமாக முடியும். ஆடை, ஆபரணச் சேர்க்கை உண்டு. பழைய வாகனங்களைக் கொடுத்துவிட்டு புதிய வாகனங்கள் வாங்க முயற்சிப்பீர்கள். இம்மாதம் வெள்ளிக்கிழமை விநாயகரையும் சனிக்கிழமை அனுமனையும் வழிபடுவது நல்லது.

**பெண்களுக்கான பலன்கள்**

இம்மாதம் பொருளாதாரம் விருத்தியாகும். புகழ் மிக்கவர்கள் உங்களுக்கு பின்னணியாக இருந்து உதவி செய்வர். கணவன்-மனைவிக்குள் ஒற்றுமை பலப்படும். பிள்ளைகளின் கல்யாண முயற்சிகளில் ஆர்வம் காட்டுவீர்கள். பெற்றோரின் ஒத்துழைப்பும் அவர்களால் ஆதாயமும் உண்டு. உடன் பிறப்புகள் உங்கள் குணமறிந்து நடந்து கொள்வர். பணி புரிபவர்களுக்கு கேட்ட சலுகைகள் கிடைக்கும். மேலிடத்தில் இருந்து பாராட்டும் கிடைக்கும்.

(தொடரும்)

## கிளிநொச்சியில்...

நேற்று சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

இதில் அதே பகுதியைச் சேர்ந்த உயர்தர வகுப்பு மாணவியான சந்திரமௌலீஸ்வரன் கிரிஜா (வயது - 18) என்ற மாணவியே சடலமாக மீட்கப்பட்டவராவார். (ம-3,350)

## மாணவிக்கு...

செய்யப்பட்டுள்ளது.

நேற்று யாழ்.பல்கலைக்கழக ஆய்வு கூடத்தில் மேற்கொள்ளப்பட்ட பிசிஆர் பரிசோதனையில் குறித்த தொற்று உறுதிப்படுத்தப்பட்டதாக வடக்கு மாகாண சுகாதார சேவைகள்பணிப்பாளர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார்.

பதுளையிலிருந்து வந்திருந்தபோதிலும் நல்லூரில் தனிமைப்படுத்தப்பட்டிருந்த நிலையிலேயே அவர் தொற்றுக்கு உள்ளாகியுள்ளமை உறுதிப்படுத்தப்பட்டதாகவும் அவர் தெரிவித்தார். (ம-3,18)

## வவுனியாவில்...

முடக்கப்பட்டுள்ளது.

கடந்த இரண்டு தினங்களிற்கு முன்பாக வெளியாகியிருந்த பிசிஆர் பரிசோதனை முடிவுகளின் பிரகாரம் குறித்த பகுதியைச் சேர்ந்த 20 பேருக்கு தொற்று இருக்கின்றமை மீண்டும் உறுதி செய்யப்பட்டிருந்தது.

இதனையடுத்து பட்டாணிச்சூர் கிராமத்தின் 1ஆம், 2ஆம்,3ஆம் ஒழுங்கைகள் நேற்று மாலை 6 மணியிலிருந்து முடக்கப்பட்டு தனிமைப்படுத்தல் ஊரடங்குச் சட்டம் அமுல்படுத்தப்பட்டுள்ளது.

குறித்த பகுதிக்குள் எவரும் நடமாட முடியாதபடி இராணுவம்மற்றும் பொலிஸார் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். (ம-3,299)

## கனடா பிரம்டன்...

தெரிவித்துள்ளார்.

இலங்கையில் தமிழர்கள் இனப் படுகொலை செய்யப்பட்டவேளை 75 ஆயிரம் தமிழர்கள் கொல்லப்பட்டனர் என பற்றிக் பிரவுண் தெரிவித்துள்ளார்.

முள்ளிவாய்க்கால் நினைவுத் தூபி அழிக்கப்பட்டமை இலங்கை அரசாங்கத்தின் கலாசார இனப்படுகொலையின் ஒரு தொடர்ச்சி என தெரிவித்துள்ள அவர்,

எவரும் உயிரிழக்கவில்லை என காண்பிப்பதற்கும் வரலாற்றை மாற்றி எழுதுவதற்கும் இலங்கை அரசாங்கம் முயல்கிறது எனவும் தெரிவித்துள்ளார்.

எங்கள் சொந்த செலவில் முள்ளிவாய்க்கால் நினைவுத் தூபியை அமைப்பதற்கு பிரம்டன் மாநகர சபை தீர்மானித்துள்ளது எனக் குறிப்பிட்டுள்ள அவர்,

இலங்கை அரசாங்கம் தனது இரத்தக் கறை படிந்த வரலாற்றை வெள்ளையடிப்பதற்கான முயற்சிகளில் ஈடுபட்டுள்ள அதேவேளை நாங்கள் கனடாவில் அதற்கு எதிர்மாறானதை செய்வோம் எனவும் குறிப்பிட்டுள்ளார்.

நாங்கள் தமிழர் இனப்படுகொலையை மறக்கப் போவதில்லை - பாதிக்கப்பட்டவர்களை நாங்கள்நினைவில்வைத்திருப்போம் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (ம-3)

## எச்சில் துப்பிய...

பட்டுள்ளது.

இதன்படி குறித்த நபருக்கு 6 வருட சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

இவர் மீதான 3 குற்றச்சாட்டுக்களை விசாரணை செய்த பண்டாரகம நீதவான் நீதிமன்றம் நேற்று இந்தத் தீர்ப்பை அறிவித்துள்ளது.

கடந்த வருடம் டிசம்பர் மாதம் பண்டாரகம - அட்டுலுகம பகுதியில் கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்ட நபரை சிகிச்சைக்காக அழைத்துச் செல்வதற்காக சென்றபோது சுகாதார பரிசோதகர்களின் செயற்பாடுகளுக்கு இடையூறு விளைவித்ததுடன் அவர்கள் மீது வைரஸ் தொற்றுக்குள்ளான நபர் எச்சில் துப்பியமை குறிப்பிடத்தக்கது. (ம-3)

## மூழ்கடிக்கப்பட்ட...

ருந்து நான்கு சடலங்கள் கண்டெடுக்கப்பட்டுள்ளன என்று கடற்படை ஊடகப் பேச்சாளர் கப்டன் இந்திக டி சில்வா தெரிவித்துள்ளார்.

இந்த சடலங்கள் கண்டெடுக்கப்பட்டதை அடுத்து, தேடுதல் நடவடிக்கை நிறுத்தப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

கடந்த 18ஆம் திகதி பின்னிரவில் நெடுந்தீவிலிருந்து சுமார் 8 கடல் மைல் தொலைவில் இந்திய மீன்பிடிப் படகு ஒன்று கடற்படைப் படகுடன் மோதி கவிழ்ந்தது.

இதையடுத்து இலங்கை கடற்படையின் சுழியோடிகள் குழு, கடற்படை படகுகள் மற்றும் கப்பல்கள் இணைந்து படகில் பயணித்த மீனவர்களை தேடும் நடவடிக்கைகளை முன்னெடுத்தது.

இந்திய மீனவர்கள் இருவரது சடலங்கள் நேற்று முன்தினம் மீட்கப்பட்டிருந்த நிலையில் நேற்று மேலும் இருவரின் சடலங்கள் மீட்கப்பட்டுள்ளன. (ம-3)

## இளம் குடும்பஸ்...

இளம் குடும்பஸ்தர் ஒருவர் மலசலகூடத்திற்குள் இருந்து சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

கடந்த செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற இச்சம்பவத்தில் கொல்லன் தோட்டம், கரணவாய் வடமேற்கைச் சேர்ந்த ஒரு பிள்ளையின் தந்தையான சண்முகம் சதீஸ்தரன் (வயது - 31) என்பவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

கடந்த செவ்வாய்க்கிழமை வயிற்றுகுத்து ஏற்பட்ட நிலையில் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டிருந்தார். அன்றைய தினம் அவர் மலசலகூடத்திற்கு சென்றபோது அங்கு விழுந்த நிலையில் காணப்பட்டுள்ளார்.

அவரைப் பரிசோதித்தபோது அவர் ஏற்கெனவே இறந்துவிட்டதாக வைத்தியர்கள் தெரிவித்துள்ளனர்.

பிரேத பரிசோதனையில் வயிற்றுப் பகுதியில் காணப்பட்ட கட்டி வெடித்ததன் காரணமாக மரணம் சம்பவித்ததாக பிரேத பரிசோதனை அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-3,60)

## நிலாவரை...

சம்பவ இடத்துக்கு சென்ற வலிகாமம் கிழக்கு பிரதேச சபையின் தவிசாளர் தியாகராஜா நிரோஷ் மற்றும் தமிழ் அரசியல் பிரதிநிதிகள் அதிகாரிகளுடன் கலந்துரையாடினர்.

குறித்த இடத்தில் கட்டடம் ஒன்று இருந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது எனவும், அதுதொடர்பில் ஆய்வுகளை நடத்தத் திட்டமிட்டுள்ளோம் என அதிகாரிகள் தெரிவித்தனர்.

ஆய்வுப் பணிக்கான செலவு மதிப்பீட்டை தயாரிப்பதற்கான பணி நேற்று முன்னெடுக்கப்பட்டதாகவும், செலவீட்டுக்கு அனுமதி கிடைத்ததும் அகழ்வுப் பணி முன்னெடுக்கப்படும் என்று அதிகாரிகள் மேலும் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை அந்தப் பகுதியில் பெருமளவு இராணுவம்குவிக்கப்பட்டு பாதுகாப்பு வழங்கப்பட்டு வருகிறது. (ம-3,18,33)

## ஒன்ப...

பேருக்கான கொரோனாத் தொற்றுப் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும், அவர்களில் வட மாகாணத்தில் 9 பேருக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதாகவும் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையின் பணிப்பாளர் த.சத்தியமூர்த்தி தெரிவித்தார்.

அந்தவகையில், யாழ் மாவட்டத்தில் 4 பேருக்கும் கிளிநொச்சி மாவட்டத்தில் 3 பேருக்கும் முல்லைத்தீவு மாவட்டத்தில் 2 பேருக்கும்,கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (ம-3,18)

## கஜேந்...

பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

பல்வேறுபட்ட கூட்ட தொடர்களுக்கு பிறகு அதாவது கிளிநொச்சி, வவுனியா, கொழும்பு மீண்டும் கிளிநொச்சி இப்படி பல கூட்டங்களுக்கு பிறகு ஒரு பொதுவான அறிக்கை தயாரிப்பிற்கு எல்லோரும் ஒன்றுபட்டார்கள்.

நாங்கள் மாத்திரம்தான் ஒரே ஒரு தமிழ்த் தேசிய வாதிகள் என்றும், மற்றவர்கள் எல்லாம் துரோகிகள் என்றும் சொல்லப்பட்டு வந்த, நாங்கள் மாத்திரம் தான் இனப்படுகொலை என்பதை உலகமெங்கும் கொண்டு சென்றோம் மற்றவர்கள் வாய் திறக்கின்றார்கள் இல்லை என்று சொல்லி வந்தவர்கள் எல்லாம், கொண்டு வந்த வரைபில் இனப் படுகொலை என்ற ஒரு வார்த்தை இல்லை.

அவர்கள் அதைக் கொண்டு வந்திருக்க வேண்டும். அவர்கள்தான் தேசியவாதிகள். அவர்கள் ஏற்றுக்கொண்ட பிறகு சுமந்திரன் சொன்னார் எனக்கு இதில் உடன்பாடு இல்லை, ஆனாலும் நான் ஏற்று கொள்ளுகின்றேன் என்று.

எனக்கு தெரியவில்லை கஜேந்திரகுமார் ஏற்றுக்கொள்வது அனைத்தையும் எவ்வாறு சுமந்திரன் ஏற்றுக் கொள்ளுகின்றார் என்று. ஆனால், அவ்வாறான நடவடிக்கை அனைத்தும் நடந்து முடிந்ததற்கு பிற்பாடு இதில் கையெழுத்து வைப்பதை ஒரு பிரச்சினையாக்கி, சிறுபிள்ளைதனமாக மாற்றினார்கள்.

“இந்த தயாரிப்பில் பலருடைய பங்களிப்பு இருந்தது. கட்சிகள் என்று பார்க்கும் போது, தமிழரசுக் கட்சி, ஈ.பி.ஆர்.எல்.எப், ரெலோ, புளொட் இதில் இணைந்து இருக்கின்றன என்றார். (ம-3)

## இருவர் பலி...

இருவர்உயிரிழந்துள்ளனர். +878 பேருக்கு தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. (ம-3)


தன நிதானய
திகதி - 2021.01.21
சீட்டிழுப்பு இலக்கம் - 411
ஆங்கில எழுத்து: M
வெற்றி இலக்கங்கள்: 16 25 40 42

கொவிசெத
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 21.01.2021
சீட்டிழுப்பு இலக்கம் 2669
ஆங்கில எழுத்து: X
வெற்றி இலக்கங்கள்: 33 45 53 60
தேசிய லொத்தர் சபை

மஹஜன சம்பத
திகதி 2021/01/21
சீட்டிழுப்பு இலக்கம் 4374
ஆங்கில எழுத்து: K
வெல்லப்பட்ட இலக்கங்கள்: 3 7 7 4 6 8
தேசிய லொத்தர் சபை

மெகா பவர்
திகதி 21/01/2021
சீட்டிழுப்பு இலக்கம் 0741
வெற்றி எழுத்து: N
சுப்பர் இலக்கம்: 09
வெற்றி இலக்கங்கள்: 21 29 47 56

வாசனா சம்பத
சீட்டிழுப்பு இலக்கம் 1656
திகதி 2021.01.21
ஆங்கில எழுத்து: N
வெற்றி இலக்கங்கள்: 01 09 20 28
தேசிய லொத்தர் சபை

அத கோடிபதி
கிழமை: வியாழக்கிழமை
சீட்டிழுப்பு இல: 1170
வர்ணம்: கடும் நீலம்
சீட்டிழுப்பு திகதி: 21.01.2021
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 100,547,045
வெற்றி இலக்கங்கள்: 03 65 68 77
ஆங்கில எழுத்து: Q
வெற்றி பெற்ற டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

சனிதா
கிழமை: வியாழக்கிழமை
சீட்டிழுப்பு இல: 3500
வர்ணம்: சிவப்பு
சீட்டிழுப்பு திகதி: 21.01.2021
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 41,490,553
வெற்றி இலக்கங்கள்: 11 28 31 37
ஆங்கில எழுத்து: F
வெற்றி பெற்ற டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

ராசி
சுப்பர் ஜக்பொட் 2,201,903/=
வெற்றி இலக்கங்கள்: 20 24 35 57
விருச்சிகம்
திகதி: 21.01.2021
வெற்றி வாரம்: 3051
வர்ணம்: மண்நிறம்
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 10,117,080

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 1344
நிறம் பச்சை
சீட்டிழுப்பு திகதி 21/01/2021
தினம் வியாழக்கிழமை
வெற்றி எழுத்தும் இலக்கங்களும்: G 13 30 32 35
அடுத்த சுப்பர் ஜக்பொட் 64,473,072/=

உத்தியோகபூர்வ முடிவுகள்
வெற்றி வாரம் 403
திகதி 21.01.2021
வர்ணம் நீலம்
ஆங்கில எழுத்து: M
வெற்றி இலக்கங்கள்: 33 45 69
விதி எண்: 9
எதிர்வரும் சுப்பர் பரிசுத்தொகை ரூ. 13,137,584
6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.
தொ. பே.: 0112 333 546/47
Web: www.dlb.lk

# ஹெரோயினுடன் வவுனியாவில் நால்வர் கைது

(வவுனியா)

வவுனியா ஆசிக்குளம் பகுதியில் ஹெரோயின் போதைப்பொருளை உடைமையில் வைத்திருந்த நான்கு பேரை வவுனியா பிராந்திய போதைத்தடுப்பு பொலிஸார் நேற்று கைது செய்துள்ளனர்.

குறித்த பகுதியில் போதைப்பொருள் பயன்பாடு இடம்பெற்றுவருவதாக பொலிஸாருக்கு கிடைத்த தகவலிற்கமைய அப்பகுதியில் சோதனைகளை முன்னெடுத்த பொலிஸார் மூன்று கிராம் ஹெரோயின் போதைப்பொருளை மீட்டுள்ளனர்.

அதனை உடைமையில் வைத்திருந்தனர் என்ற சந்தேகத்தின் அடிப்படையில் அதே பகுதிகளை சேர்ந்த நான்கு பேரை கைது செய்துள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்கள் மேலதிக விசாரணைகளின் பின்னர் நீதி மன்றில் ஆஜர்படுத்தப்படவுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (ம-03,299)


## கிழவன்காடு கலாமன்றம்

காரைநகர் யாழ். கிளை

அறநெறி மற்றும் கலை வகுப்புக்களுக்கான அனுமதி

எமது கலாமன்ற இரு கிளைகளிலும் எதிர்வரும் 28.01.2021 ஆம் திகதி வியாழக்கிழமை ( தைப்பூச நாள்) அறநெறி மற்றும் கலை வகுப்புக்கள் ஆரம்பமாகவுள்ளதால் சமயம் மற்றும் கலைகளில் ஆர்வமுள்ள மாணவர்களுக்கான அனுமதிகளை சுகாதார நடைமுறைகளுக்கு அமைவாக பெற்றுக் கொள்ளவும்.

நடைபெறுகின்ற கலை வகுப்புக்கள்

- அறநெறி
- பண்ணிசை
- சங்கீதம்
- நடனம்
- மிருதங்கம்
- வயலின்
- வீணை
- ஒகன்
- நாடகமும் அரங்கியலும்
- யோகாசனம், தியானம்
- மாலை கட்டுதல்
- கோலம் போடுதல்
- தோரணம் பின்னுதல்



(C-1225)

பதிவாளர், காரைநகர். 077 139 9232

பதிவாளர் இல. 428, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம். (வண்ணை சிவன் கோவில் அருகாமை) 077 578 6638



## உடனடி வேலைவாய்ப்பு

யாழ்.நகர பகுதியில் இயங்கும் தங்க நகை அடகு சேவை நிலையத்துக்கு A/L படித்த கணனி அறிவுள்ள பெண் வேலையாள் தேவை. (5351)

077 784 0379



## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் இராச வீதியில் ராச வீதி சந்திக்கு அருகாமையில் 4 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு. இரண்டு பரப்பாக பிரித்துக் கொடுக்கப்படும். (5356)

077 468 3354
077 805 1655



## Aspirant Institute of Education (AIE)

12/1, Nanthavil Lane, Kokuvil East, Kokuvil, Jaffna.

தரம் 06 முதல் O/L வரை

2021 ஜனவரி 28 ஆம் திகதியில் இருந்து ஆங்கிலம் மற்றும் ஆங்கில இலக்கிய நேர்நிலை வகுப்புக்கள் ஆரம்பம் !

ஆசிரியர்: பா. கமலதாசன்

தொடர்பு - 021 222 2160 & 077 777 8823

புதிய அனுமதிகள் வழங்கப்படுகின்றன ... (5352)



## Techno World தொழில்நுட்பக் கல்லூரி

வெலிங்டன் சந்தி, லிங்கம் கூல்பார் அருகாமை, யாழ். தொ.பே : 0770175346

பொறியியல் தொழினுட்பம்
உயிர்முறைமைகள் தொழினுட்பம்

A/L 2022

A/L 2020,2021 வகுப்புக்கள்

மீண்டும் ஆரம்பம் 25.01.2021
திங்கட்கிழமை மாலை 3.30 மணிக்கு (C-1224)



## மோட்டார் சைக்கிள் விற்பனைக்கு

VYxxxx இலக்கமுடைய பிளசர் மோட்டார் சைக்கிள் விற்பனைக்கு. (சிவப்பு + கறுப்பு நிறம்)

தொடர்பு 077 818 5017 (5355)



## அண்ணா விரைவுப் பொதிகள் சேவை

EXPRESS Courier Services

லண்டன் 1000/= 070 3305500 075 3305500

3-6 நாட்கள் (C-1174)

976, கே.கே.எஸ் வீதி நாச்சிமார்கோவிலடி யாழ்ப்பாணம்

சங்கானை ஆவரங்கால் நெல்லியடி சங்கத்தானை | பளை கிளிநொச்சி புதுக்குடியிருப்பு முல்லை | மல்லாவி மன்னார் வவுனியா கொழும்பு

லண்டன்,பிரான்ஸ்,ஜேர்மனி உட்பட 20 நாடுகளுக்கு மேலதிக கட்டணமாக வரிகள் ஏதும் இல்லை

15,000 /- பெறுமதி வரை காப்புறுதி இலவசம்

உங்கள் வீடுகளுக்கே வந்து பொதிகள் பெற்றுக்கொள்ளப்படும்.(யாழ் மாவட்டம் முழுவதும்)



## வலம்புரி

விளம்பரத் தொடர்புகளுக்கு

021 221 7603
021 567 1532



## விரைவு பொதிகள் சேவை V2 TRAVELS

UK-1000/=Kg

பிரான்ஸ் / ஜெர்மனி / டென்மார்க் நெதர்லாந்து / இத்தாலி / சுவிஸ் 1150/=Kg

எமது நேரடிக்கிளைகள்

- யாழ்ப்பாணம்
- புத்தூர்
- கோப்பாய்
- நெல்லியடி
- கொடிகாமம்
- மானிப்பாய்
- புதுக்குடியிருப்பு
- சுன்னாகம்
- கிளிநொச்சி
- பருத்தித்துறை
- வல்வெட்டித்துறை
- சாவகச்சேரி

(C-1167)

0768226240 DHL


## 90 ஆவது பிறந்தநாள் மலரும் நினைவுகள்

கொக்குவில் கிழக்கைச் சேர்ந்த

அமரர்

### ஸ்ரீமதி சிவகாமி அம்மா சந்திரசேகர ஐயர்

( காஸ்யப கோத்திரம் )



மண்ணுலகில் 22.01.1931 விண்ணுலகில் 12.04.2019

அன்பின் சிகரமாய்
பண்பின் உறைவிடமாய்
பாசத்தில் இறையை மிஞ்சும்
அன்னைக்கு மலரும் நினைவுகளாய்
இறைபாதம் சமர்ப்பிக்கிறோம்.

2 ஆவது வருஷாப்திகம் 21.03.2021
( பூர்வபக்ஷ அட்டமி )

" சிவகாமி பவனம் "
17/35, கலட்டி முந்தல் ஒழுங்கை,
கொக்குவில் கிழக்கு, கொக்குவில்.

021 222 0069 குடும்பத்தினர் (5315)

## 6ஆம் மாத நினைவு அஞ்சலி

### மணிவண்ணன் லக்சிகா (லக்சி)



பிறப்பு 21.12.2004
இறப்பு 28.07.2020

அன்பு மகளே லக்சி லச்சம்
கோடி பெற்றாலும் உன்
போல ஆகாது மகளே. லக்சி,
உன்னை எவ்வளவு தூரம்
இழந்திருக்கின்றோம் என்பதும்
எங்கள் துயரத்தின் ஆழமும் அறிவும்
என்றும் உனக்கு தெரியப்போவதில்லை.
காலன் உனை அணுகி
காதவழி தூரம் சென்றாலும்
புலர்ந்திடும் பொழுதெல்லாம்
உன் திருமுகம் தெரியுது மகளே
அகிலமெல்லாம் அறிந்திட
வதிவிடத் தரணியில் வாழ்வாய்
என இருந்தோம்.
உருண்டோடியது 6 மாதங்கள் உனைப் பிரிந்து
சிறகொடிந்த பறவையாய் நாம்
வாழ்கின்றோம் இப் பூமியில்

உனது ஆத்ம சாந்திக்காக எல்லாம்வல்ல துர்க்கை அம்மனை பிரார்த்திக்கின்றோம்.

துர்க்கா ஸ்ரோர்ஸ், ஏழாலை தெற்கு, சுன்னாகம்.

அப்பா, அம்மா, அண்ணா, அக்கா, தங்கை. (5333)

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 22.01.2021 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.